பக்கங்கள் பன்னிரண்டு

உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 13 வியாழக்கிழமை (27-06-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:214

மூதூரில் பதற்றம்

ஊரடங்கு நீடிப்பு!

படப்பிடிப்பாளருக்கு வாள்வெட்டு; பீதியால் மக்கள் இடம்பெயர்வு

தம்பலகாமம்,ஜூன்27

கலவரங்கள் இடம்பெற்ற மூதூர் நகர்ப்பகுதியில் நேற்று மீண்டும் பதற்றம் ஏற்பட்டது. சுயாதீன ஊடகவியலாளரான படப்பிடிப்பாளர் ஒருவர் தாக்கப் பட்டதை அடுத்தே அங்கு பதற்றநிலை உருவானது. காலையில் வழமைக் குத் திரும்பிய நகரம் திரும்பவும் வெறிச்சோடியது. ஊரடங்குச் சட்டம் மீண்டும் பிறப்பிக்கப்பட்டது.

மூதூர் நகரப் பகுதியில் சுதந் திர ஊடகவியலாளர் சற்சிவானந்தன் என்பவரின் வீடு உடைக்கப்பட்டு அவர் தாக்கப்பட்டதை அடுத்தே பதற் றமும் பீதியும் பரவின. அங்கு பொலீஸ் இராணுவக் கூட்டு ரோந்து அதிகரிக் கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களை அடுத்து அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ஊர டங்கு நேற்றுக்காலை 6 மணிக்கு நீக் கப்பட்டது. அதன்பின்னர் கடைகள் திறக்கப்பட்டு நகர் வழமைக்குத் திரும்பியது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான செய்திகளையும் புகைப்படங்களை யும் சர்வதேச செய்தி ஏஜென்ஸி களுக்கு வழங்கிய சற்சிவானந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

இன்று காலை சமாதான மாநாடு

தம்பலகாமம்,ஜூன்27

மூதூரில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைத் தணிப்பதற்காக அங்கு இன்று காலை சமாதான மாநாடு ஒன்று இடம்பெறவுள்ளது.

திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள மின்சக்தி, வலு அமைச்சர் கரு ஜெயசூரியா, கிழக்கு புனர்வாழ்வு அமைச்சர் ரவூப் ஹக் கீம், தமிழர் விடுதலைக் கூட்டணி யின் செயலாளர் நாயகமும் திருமலை மாவட்ட எம்.பியுமான ஆர்.சம்பந்தன் ஆகியோர் இந்த மாநாட்டில் பங்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

அல்லைப்பிட்டியில் சோதனை நிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜூன்27

அல்லைப்பிட்டிச் சந்தியில் நிலை கொண்டுள்ள கடற்படையினர் நேற்று முன்தினம் முதல் தமது சோதனை நடவடிக்கைகளை தளர்த்தியுள்ளனர்.

இதனால் யாழ்நகரப் பகுதியில் இருந்து தீவுப் பகுதிகளுக்குச் செல் வோரும் மற்றும் தீவுப் பகுதியில் இருந்து யாழ்நகரப் பகுதிக்கு வருவோ ரும் எவ்வித இடையூறும் இன்றி பய ணம் செய்யக்கூடிய நிலை ஏற்பட்டுள் ளது. வாகன சோதனைகளும் நிறுத் தப்பட்டுள்ளன.

(12ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் எச்சரிக்கை!

யாழ்ப்பாணம்,ஜூன்27

அத்தியாவசியச் சொத்துக்கள், பொதுச் சொத்துக்கள் ஆகியவற்றுக்கு நாசம் விளைவிப்போருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம் பரிதி தெரிவித்தார்.

வடமராட்சி பிரதேச சபை பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடை யில் நேற்று இடம்பெற்ற சந்திப்பு ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறி னார்.

"அத்தியாவசியச் சொத்துக்கள்,

(12ஆம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறை டிப்போவைச் சேர்ந்த

பஸ் ஊழியர்கள் நேற்று திடீரென வேலைநிறுத்தம்!

வடமராட்சி பயணிகள் பாதிப்பு

வடமராட்சி,ஜூன்27

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ ஊழியர்கள் நேற்று அதிகாலை முதல் வேலைநிறுத்தத்தில் குதித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு பருத்தித் துறை டிப்போவில் நுழைந்த கும்பல் ஒன்று அங்கு கடமையில் இருந்து பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், பஸ் சாரதிகள், நடத்துநர்கள் ஆகியோ ரைத் தாக்கியதாகவும் -

பஸ்கள்மீது கற்கள் வீசியதாக வும் -

தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஊழி யர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட் டனர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நண்பகல் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்

(12ஆம் பக்கம் பார்க்க)

இராணுவ சமபலத்துக்காக புலிகள் ஆள்திரட்டுவது பிழையானதாகாது!

நெதர்லாந்து, பிரான்ஸ் தூதுவர்களிடம் ஜோசப் எம்.பி.

மட்டக்களப்பு,ஜூன்27

தமிழ்மக்கள் விடுதலைப் புலி களைத் தங்களின் காவலராக ஏற் றுக்கொண்டுள்ளனர். தற்போது நடை முறையில் இருப்பது சமாதான ஒப் பந்தம் அல்ல. அது யுத்தநிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை. எனவே, சிலவேளை எந்தநேரத்திலும் உடன் படிக்கை முறிவடையலாம். ஆகவே புலிகள் இராணுவ சமபலத்துடன் இருப் பதற்காக ஆள்களைத் திரட்டுவதைப் பிழை என்று கூறமுடியாது.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜ சிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பில் வைத்து நெதர்லாந்து தூதுவர் சுசான் பிளாங் கட், பிரான்ஸ் தூதுவர் மாரி பெக் னல் டுபைட் ஆகியோரைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புலிகள் கட்டாய ஆள்சேர்ப்பில்

(12ஆம் பக்கம் பார்க்க)

ஊர்காவற்றுறை நோக்கி இன்று மக்கள் பேரணி!

ஆயிரக்கணக்கானோர் அணிதிரள்வர்

யாழ்ப்பாணம்,ஜூன்27

தீவகத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் தாக்கப்பட்டது உட்பட சமாதானத்துக்கு எதிரான சக்தி களின் நடவடிக்கைகளைக் கண்டித்து இன்று யாழ்நகரிலிருந்து ஊர்காவற் றுறைக்குப் பெரும் மக்கள் பேரணி நடைபெறுகிறது.

பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய சகல துறையினரையும் தங்கள் நாளாந்த செயற்பாடுகளை நிறுத்தி விட்டு இந்தப் பேரணியில் அணி திரண்டு வந்து பங்கேற்குமாறு வெகு ஜன அமைப்புகளின் ஒன்றியம் அழைப்பு விடுத்திருக்கிறது.

இன்று காலை 10 மணியளவில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இருந்து புறப்படவுள்ள பேரணி, ஊர் காவற்றுறை சென்.அன்ரனீஸ் கல் லூரியில் நடைபெறும் மாபெரும் கண் டனப் பொதுக்கூட்டத்தைத் தொடர்ந்து நிறைவுபெறும்.

மேற்படி கண்டனப்பேரணி தொடர் பாக வெகுஜன அமைப்புகளின் ஒன் றியம் நேற்றிரவு விடுத்த அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வர்த்தகர் சங்கம், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், மாவட்ட கூட்டுற வுச் சபை, கூட்டுறவுச் சங்கங்கள், மனிதநேய அமைப்புகள் மற்றும் சனசமூக நிலையங்களின் சமாசம்,

(12ஆம் பக்கம் பார்க்க)

அமெரிக்கா, இந்தியா, சீனாவுடன் ஒப்பந்தங்களா?

அரசுத் தரப்பின் கபட நோக்கம் பற்றி பிரான்ஸ் தூதருக்கு கரிகாலன் விளக்கம்

மட்டக்களப்பு,ஜூன்27

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தாம் வாக்களித்தபடி இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு முன் னர் அமெரிக்கா, இந்தியா, சீனா முதலான வெளிநாடுகளுடன் ஒப்பந் தம் செய்கிறார். இதில் உள்ள கபட நோக்கங்களை பிரான்ஸ் தூதுவர் மாரி பிரான்ஸ் பக்னர் டுனாவானிடம் எடுத்துக்கூறினார் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கரி காலன்.

இருவருக்கும் இடையிலான சந் திப்பு மட்டக்களப்பில் உள்ள விடு தலைப் புலிகளின் அலுவலகத்தில் நடந்தது. அப்போது மட்டக்களப்பு அரசியல் பொறுப்பாளர் விசு, துணைப் பொறுப்பாளர் துரை ஆகியோரும் உடன் இருந்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

ஈ.பி.டி.பி. துண்டுப் பிரசுரம்

யாழ்ப்பாணம்,ஜூன்27

அர்த்தமற்ற காரணங்களுக்காக கடையடைப்பதைத் தவிர்க்குமாறும், பாடசாலைக் கல்வியைச் சீர்குலைக் கும் பகிஷ்கரிப்புகளைக் கைவிடுமா றும் கோரும் துண்டுப் பிரசுரங்களை ஈ.பி.டி.பி. அமைப்பினர் நேற்று யாழ் நகரிலும் ஏனைய இடங்களிலும் விநி யோகித்தனர்.

'ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி' என்ற பெயரில் நேற்றைய திகதி இடப்பட்டு, அந்தப் பிரசுரங்கள் அச் சிடப்பட்டிருந்தன.

(12ஆம் பக்கம் பார்க்க)

படைகளின் புதிய அரண்கள் உடன்படிக்கைக்கு முரண்!

கண்காணிப்புக் குழுவிடம் தளபதி தீபன் முறைப்பாடு

வவுனியா,ஜூன்27

போர்நிறுத்த உடன்படிக்கையை மீறும் வகையில் ஸ்ரீலங்காப் படையி னர் கிளாலி முதல் நாகர்கோயில் வரையிலான பகுதியில் விடுதலைப் புலிகளின் முன்னரங்குக்கு மிகவும் அண்மையில் வந்து, காவல் அரண் களை அமைத்து வருகிறார்கள். இது பற்றி அந்தப் பிரதேசத்துக்குரிய புலி களின் தளபதி கேணல் தீபன் கண் காணிப்புக் குழுவிடம் முறையிட்டி ருக்கிறார்.

இப்பகுதியில் விடுதலைப் புலிக ளின் முன்னரங்கப் பகுதிக்கு அரு காக வந்து படையினர் நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக கேணல் தீபன் கண்காணிப்புக் குழுவிடம் 3 முறைப்பாடுகள் செய்திருக்கிறார்.

கடந்த மே மாதம் 27ஆம் திகதி கண்காணிப்புக் குழுவிடம் செய்யப்

(12ஆம் பக்கம் பார்க்க)

கரும்புலி மில்லரின் சிலை புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்27

கரும்புலிகள் தினத்தை முன் னிட்டு நெல்லியடி மத்திய மகாவித் தியாலயத்தின் முன்பாக உள்ள கரும் புலி கப்டன் மில்லரின் சிலை புனர மைக்கப்பட்டு வருகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது கரும்புலியான கப்டன் மில்லர், 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5ஆம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நிலை கொண் டிருந்த இலங்கை இராணுவத்தினர் மீது தனது கரும்புலித் தாக்குதலை

(12ஆம் பக்கம் பார்க்க)

வேலணைச் சம்பவம் அடையாளம் காட்டிய

சமாதான விரோதிகளுக்கு எதிராக அனைவரும் ஓரணியில் திரள்வோம்!

யாழ்.மாவட்ட மாணவர் ஒன்றியம் அறைகூவல்

யாழ்ப்பாணம்,ஜுன்27

"சமாதானத்துக்கு எதிரான சக்திகள் யார் என்பதை வேலணையில் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினர்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் அடையாளம் காட்டியுள்ளது. ஆகவே, அந்தச் சக்திகளுக்கு எதிராக அனைவரும் திரண்டு குரல் கொடுப்போம்."

- இவ்வாறு அறைகூவல் விடுத்துள்ளது யாழ்.மாவட்ட மாணவர் ஒன்றியம்.

வேலணைத் தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து வெகுஜன ஒன்றியம் இன்று நடத்தும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையிலேயே இது குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

தொடர்ச்சியான யுத்த அவலங்களுக்குப் பின்னர் இன்று ஏற்பட்டுள்ள யுத்தமற்ற நிலைமை நீடித்து நிலைக்க வேண்டும்; எமது தேசியப் பிரச்சினைக்கு சமாதான வழியில் உரிமைகளுடனான ஒரு நிரந்தரத் தீர்வு கிட்டப்படவேண்டும் என்பதே அனைத்துத் தமிழ்மக்களின் எதிர்பார்ப்பாகும்.

இன்று தமிழ்மக்களின் பாதுகாவலர்களாக உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதான வழிமுறையில் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முன்வந்து அதற்காகப் பல விட்டுக் கொடுப்புக்களையும் மேற்கொண்டு வரும் இன்றைய நிலையில், சமாதானத்திற்கு எதிரான சக்திகள் இன்றைய சமாதானச் சூழலைக் குழப்பும் விதத்திலான செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றன.

இதில் ஒரு சம்பவமே தீவுப் பகுதியில் நிராயுதபாணிகளாகச் சென்ற விடுதலைப் புலிப் போராளிகளுக்கு நேர்ந்த கதியாகும். அன்று மக்களின் தலையீடு சற்றுப் பிந்தியிருப்பின் யுத்தநிறுத்தம் கேள்விக்குள்ளாகியிருக்கும்.

இதுமட்டுமல்ல புரிந்துணர்வு உடன்படிக்கையைச் சீராக அமுல்படுத்துவதிலும் அரசாங்கத் தரப்பு அசமந்தப் போக்கையே காட்டி வருகிறது. இத்தகைய செயற்பாடுகள் உண்மையான சமாதானத்தின் எதிரிகள் யார் என்பதை வெளிச்சம்போட்டுக் காட்டுகின்றன.

புரிந்துணர்வு ஒப்பந்தம் சீராக அமுல்படுத்தப்படுவதிலேயே எமது மண்ணில் நிரந்தரமான அமைதி நிலை ஏற்படுவது தங்கியுள்ளது. தற்காலிகமான தற்போதைய யுத்தமற்ற நிலை தொடரவேண்டுமாயின் ஒப்பந்த மீறல்களுக்கு எதிரான மக்களின் குரல் வலுப்பெறவேண்டும்.

இன்று நாம் விழிப்புடன் இருந்து குரல் கொடுக்கத் தவறும் பட்சத்தில் நாளைய நாள்கள் யுத்த மேகங்கள் சூழ்ந்ததாக விடிவதை யாராலுமே தடுக்கமுடியாததாகிவிடும்.

எனவே, வெகுஜன அமைப்புகளினால் ஒழுங்கு செய்யப்பட்ட மாபெரும் கண்டனப் பேரணியில் யாழ்.மாவட்ட மாணவர்களின் முழுமையான பங்களிப்பும் இருக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றோம் என்றுள்ளது. (ஒ)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு!

யாழ்.பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களுக்குமான அவசர கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

அனைத்துப் பீட மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படியும், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (ஐ-3)

பனை அழிப்புக்கு எதிரான பேரணி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜுன்27

பனை மரங்கள் தறிக்கப்படுவதைக் கண்டித்து நாளை இடம்பெறவிருந்த கண்டனப் பேரணி மறு அறிவித்தல்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று வடமாகாண தெங்கு, பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அறிவித்துள்ளது.

இன்று இடம்பெறவுள்ள கண்டனப் பேரணி காரணமாக நாளைய பேரணி ஒத்திவைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

விளையாட்டுச் செய்திகள்

யாழ்ப்பாணம்,ஜுன்27

இலங்கை வங்கி மற்றும் வர்த்தக வங்கியின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தினரால் நடத்தப்பட்டுவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பி.ப.4.30 மணிக்கு கோண்டாவில் மறுமலர்ச்சிக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள இரண்டாம் சுற்றுப்போட்டியில் சண்டிலிப்பாய் சிவசக்தி வி.கழகமும், சுன்னாகம் கலைவாணி வி.கழகமும் பங்குபற்றுகின்றன. (ஒ-ரி-86)

★ ★ ★

யாழ்.சன்மார்க்க மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு வண்ணை வெங்கடேச பெருமாள் ஆலய முன்றிலில் அதிபர் து.நடராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பிரதேச செயலர் பி.செந்தில்நந்தனனும், சிறப்பு விருந்தினராக யாழ்.கோட்டக்கல்வி அதிகாரி ஏ.இராஜகோபாலும், கௌரவ விருந்தினராக சமூக சேவையாளர் பா.பாலசுப்பிரமணியமும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஒ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுன்27

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கம் வடமராட்சிக்குட்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்திவரும் 'ரொப் ரென்' உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் வி.க. மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

பி.ப. 4மணிக்கு கொற்றாவத்தை சிவானந்தா வி.க. எதிர் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் வி.க.

பி.ப. 5 மணி நவிண்டில் கலைமதி வி.கழகம் எதிர் வதிரி டயமன்ஸ் வி.கழகம். (ஒ-ரி)

யாழ்.மத்தியஸ்தர் குழு தம்புள்ள செல்கிறது

யாழ்ப்பாணம்,ஜுன்27

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் விசேட ஏற்பாட்டில் மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி வகுப்புக்களில் கலந்துகொள்வதற்காக யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் மத்தியஸ்தர் குழு இன்று தம்புள்ள புறப்படுகிறது.

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுமதியுடன் செல்லும் இக்குழு, தம்புள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் பயிற்சியில் ஈடுபடும்.

இக்குழுவின் இணைப்பாளராக யாழ்.மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர் வீ.கே.சண்முகலிங்கம் செல்கிறார்.

மத்தியஸ்தர் குழுவில் இடம்பெறுவோர் விவரம் வருமாறு:-

டீ.எம்.வேதாபரணம், எஸ்.விமலதாஸன், எஸ்.தயாளன், என்ரவீந்திரா, எஸ்.தேவானந், கே.சுதாகரன், ஏ.பிறேமானந்த், பீ.பார்த்தீபன், கே. செல்வராசா. எஸ்.கோகுலன். (ஐ-3)

644 மாணவர்கள் இம்முறை யாழ்.பல்கலைக்கு அனுமதி

ஜூலை 5இற்குள் பதிவுசெய்யவும்

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட 'இசற்' ஸ்கோர் புள்ளித்திட்டத்தில் 2002 - 2003 கல்வியாண்டில் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு 644 மாணவர்கள் அனுமதிபெற்றுள்ளனர்.

அனுமதிபெற்றுள்ள மாணவர்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் தெரிவுசெய்யப்பட்ட பீடங்கள் பற்றிய பட்டியல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மருத்துவத்திற்கு 80 மாணவர்களும், விவசாய விஞ்ஞானத்திற்கு 57 மாணவர்களும், உயிரியல் விஞ்ஞானத்திற்கு 48 மாணவர்களும், பௌதிக விஞ்ஞானத்திறகு 112மாணவர்களும், முகாமைத்துவ கற்கைநெறிக்கு 78 மாணவர்களும், வர்த்தகத்துறைக்கு 44 மாணவர்களும், கலைப்பிரிவுக்கு 225 மாணவர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்டுள்ள மாணவர்கள் அனைவரும் எதிர்வரும் ஜுலை 5ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளர் கேட்டுள்ளார். (ஒ-ரி)

சாயி சிந்தனை

ஸ்வர்க்கம் எது?

இந்தப் பிரபஞ்சமே உன்னுள் இருக்கிறது. மலைகள் சற்றுத் தொலைவில் இருந்து பார்க்கும்போது வழவழப்பாகக் காணப்படலாம். ஆனால், பக்கத்தில் நெருங்கும்போதுதான் உண்மை தெரியவரும். தொலைவில் இருப்பதனால்தான் அந்த அழகு தெரிகிறது. நீங்கள் கைலாசம், வைகுண்டம், ஸ்வர்க்கம் போன்றவை எங்கோ தூரத்தில் இருக்கின்றன என நினைக்கும்போது பைத்தியம் பிடித்துவிடும். ஆனால், அவையெல்லாம் வேறெங்கும் இல்லை, உன் இதயத்தினுள் மட்டுமே இருக்கின்றன. உனது மகிழ்ச்சிதான் உனக்கு ஸ்வர்க்கம். உனது துயரம்தான் உனக்கு நரகம். ஸ்வர்க்கம், நரகம் என்ற தத்துவம் ஏற்பட்டதன் நோக்கமே நீ நல்லனவற்றையே செய்து வரவேண்டும் என்பதற்காகத்தான்! ஸ்வர்கம், நரகம் இவையெல்லாம் எங்கும் தனித்தனியாக இல்லை. அவையெல்லாம் உன் மனதிலேயே இருக்கின்றன. துயரத்துக்கு என்ன காரணம்? உன் செயல்களே அதற்குக் காரணம். புத்தர் ஆறு ஆண்டு காலம் தவம் செய்தார். ஒருநாள் கண்ணைத் திறந்து திருடனைப் பிடித்துவிட்டதாகக் கூறினார். யார் அந்தத் திருடன். மனம்தான் திருடன். மனமே அனைத்துத் துயரங்களுக்கும் மூல காரணம் என்று புரிந்துகொண்டார். உனது மனதை உன்னால் கட்டுப்படுத்த முடியுமானால் உனக்குத் துயரங்கள் என்பதே இருக்காது. மனிதன் எல்லாவற்றையும் வென்றுவிட்டான் 'தன்னைத் தவிர'. உண்மையான ஆத்மாவைப் பற்றி அறிந்துகொள்ளாமல் மனிதன் மற்ற எல்லாவற்றையும் அறிந்துகொள்ள முயல்கிறான். உன்னைப் பற்றிப் புரிந்துகொள்! நீ மற்ற எல்லாவற்றையும் அறிந்துகொள்ளமுடியும்.

ஜப்பான் தென்கொரியா

உலகக் கிண்ண கால்பந்து

31.05.2002 - 30.06.2002

இறுதியில் ஜேர்மனியை சந்திக்கிறது பிரேஸில்!

பந்துடன் முன்னேறும் ரொனால்டோவைத் துரத்தும் துருக்கிய வீரர் உமிச் டவாலா.

டோக்கியோ,ஜுன்27

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் பிரேஸில் மற்றும் ஜேர்மன அணிகள் மோதவுள்ளன. நேற்று நடந்த துருக்கியுடனான அரையிறுதி ஆட்டத்தில் வெற்றிபெற்றதன் மூலம் இறுதி ஆட்டத்தில் பங்குகொள்ளும் தகுதியை பிரேஸில் பெற்றது. 72ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட உதைபந்தாட்டப் போட்டிகளில் பிரேஸில் மற்றும் ஜேர்மனி அணிகள் இறுதியாட்டத்தில் மோதுவது இது 7ஆவது தடவையாகும்.

பிரேஸில் - துருக்கி இடையேயான அரையிறுதி ஆட்டம் நேற்று மாலை 5.30மணிக்கு ஜப்பானின் சைற்றமா மைதானத்தில் நடைபெற்றது. முன்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் விட்டுக்கொடுக்காமல் ஆடின. முதல் 15 நிமிடங்களில் இரு அணிகளும் மிகமிக விறுவிறுப்பாக ஆடின. அடுத்தடுத்து இரு அணிகளுக்கும் சில சந்தர்ப்பங்கள் கிடைத்தன. ஆனால், அவற்றை இரு அணிகளும் சரியாகப் பயன்படுத்தவில்லை. இரு அணிகளதும் கோல்காப்பாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டு கோல் அடிக்கும் சந்தர்ப்பங்கள் பலவற்றைத் தடுத்தனர்.

ஆட்டத்தின் 20ஆவது நிமிடத்தில் துருக்கிய வீரர் அக்யெல் அடித்து உயரே எழும்பி வந்த பந்தை அவரது சக வீரரான அல்பே ஒஸாலன் உயரே எம்பி நல்லமுறையில் தலையால் மோதினார். ஆனால், பிரேஸில் கோல்காப்பாளர் மார்க்கோஸ் குறுக்கே பாய்ந்து பந்து கோல்கம்பங்களுக்குள் புகாமல் தடுத்தார். அடுத்த இரு நிமிடங்களுக்குள் பிரேஸில் அணித் தலைவர் ஹவுவின் நேர்த்தியான உதையை திறம்படத் தடுத்தார் துருக்கிய கோல்காப்பாளர் ரெஸ்டு.

எந்த அணியும் கோல் அடிக்காத நிலையில் முன்பாதி ஆட்டம் நிறைவடைந்தது.

பின்பாதி ஆட்டத்தில் பிரேஸில் மிகவிரைவாக முன்னேறித் தாக்குதல் ஆட்டம் நடத்த ஆரம்பித்தது. ஆட்டம் ஆரம்பமான நான்கே நிமிடங்களில் பிரேஸில் நட்சத்திரம் ரொனால்டோ அற்புதமாக ஒரு கோலை அடித்தார். அவரது சகா கில்பேர்ட்டோ சில்வாவிடம் இருந்து கிடைத்த பந்தை, மிக நுணுக்கமாகத் துருக்கிய பின்களத் தடுப்பாளர்கள் நால்வரை ஏமாற்றிவிட்டு வலது காலால் குத்தி உதைத்தார். வேகமாக வந்த பந்தை தன் இடதுபுறம் பாய்ந்து தடுத்தார் துருக்கிய கோல்காப்பாளர் ரெஸ்டு. ஆனால், அடியின் வேகம் காரணமாக பந்து ரெஸ்டுவின் கைகளைத் தட்டிக்கொண்டு இடது கோல் கம்பத்தின் அருகாக உள்நுழைந்து கோலானது. அதுவே இந்த ஆட்டத்தில் அடிக்கப்பட்ட ஒரேயொரு கோலாகவும், பிரேஸிலுக்கு வெற்றியைத் தேடித்தந்த கோலாகவும் அமைந்தது.

இந்தக் கோல் மூலம் இதுவரை நடந்த ஆட்டங்களில் அதிக கோல் அடித்த வீரர் என்ற பெருமையையும் ரொனால்டோ பெற்றுக்கொண்டார். அவர் இதுவரை 6 ஆட்டங்களில் ஆடி 6 கோல்களை அடித்துள்ளார். கோல் அடித்த சில நிமிடங்களில் துருக்கிய வீரர் ஒருவருடன் ஏற்பட்ட பலப்பரீட்சையில் ரொனால்டோ நிலத்தில் வீழ்ந்தார். அந்தச் சம்பவத்துடன் அவர் அந்த ஆட்டத்தில் இருந்து வெளியேறினார். அவருக்குப் பதிலாக துணைஆட்டக்காரர் ஒருவர் தொடர்ந்து ஆடினார். ஆட்டத்தின் 57ஆவது நிமிடத்தில் பிரேஸில் வீரர் உதைத்து சீறிவந்த பந்தை குறுக்கே பாய்ந்து கோல்போகாமல் தடுத்தார் துருக்கிய வீரர் அக்யெல்.

எப்படியும் ஒரு கோலாவது அடித்துவிட வேண்டும் என்று ஆட்டத்தின் பின்பகுதியில் துருக்கிய வீரர்கள் பகீரதப்பிரயத்தனம் செய்தனர் எனினும் பிரேஸில் பின்களத் தடுப்பாளர்களைத் தாண்டி முன்னேற அவர்களால் முடியவில்லை. அந்தளவுக்கு மிகச் சிறப்பாக பிரேஸில் பின்கள வீரர்கள் தமது திறமையை வெளிப்படுத்தினர். இந்த ஆட்டத்தில் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம், ஆட்டம் முழுமையும் ஒழுக்கம்மிக்கதாக இடம்பெற்றமை. எந்த அணியினரும் மிக மோசமான முரட்டு ஆட்டத்தில் ஈடுபடவில்லை. பிரேஸில் வீரர் ஒருவருக்கும் துருக்கி வீரர்கள் இருவருக்குமே நடுவரால் மஞ்சள் அட்டை காட்டப்பட்டது. இறுதியில் 1-0 என்ற கோல் அடிப்படையில் பிரேஸில் வென்றது.

இறுதி ஆட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஜப்பானின் யோகஹாமா மைதானத்தில் இலங்கை நேரப்படி மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும்.

3ஆம் இடத்துக்கான ஆட்டம் நாளை மறுதினம் ; சனிக்கிழமை மாலை 5 மணிக்கு தென்கொரியாவின் டொகுமைதானத்தில் நடைபெறும். இதில் தென்கொரியாவும் துருக்கியும் மோதவுள்ளன.

மகிழ்ச்சிப் பூரிப்பில் பிரேஸில் ரசிகர்கள்

உதயன்

வடக்கு - கிழக்கு சம்பவங்கள்!

வடக்கு - கிழக்கில் இன்று ஒரே கொந்தளிப்பு. அமைதி இல்லை.

பத்தொன்பது வருட காலக் கொடிய யுத்தத்தால் பெருமளவில் பாதிக்கப்பட்டு அல்லோலகல்லோலப்பட்டு இருந்த நாட்டிலே குறிப்பாக வடக்கு - கிழக்கிலே அமைதியையும் சமாதானத்தையும் நிலைபெறச் செய்யவே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் விரும்பிக் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை, யுத்தத்தை நிறுத்துவதில் வெற்றி கண்டது.

ஆனால், அமைதியையும் சமாதானத்தையும் நிலைபெறச் செய்வதில் இதுவரை கண்டது தோல்விதான்.

பத்திரிகைகளைப் புரட்டினால் தாக்குதல் சம்பவங்கள் பற்றிய செய்திகள், தொலைக்காட்சியை பார்த்தால் அதே தாக்குதல் செய்திகள், வானொலியைக் கேட்டாலும் அதே செய்திகள் தான்.

ஒரு தாக்குதல் சம்பவம் நடந்தால் விடயம் அவ்வளவோடு முடிந்து விடுகிறதா? இல்லை. அந்த சம்பவத்துக்கு எதிர்ப்பும் கண்டனமும் தெரிவித்து ஹர்த்தால், ஊர்வலம், ஆர்ப்பாட்டம், பேரணி என்று இப்படி எத்தனையோ நடக்கின்றன.

அவற்றை குழப்புவதற்கு எதிரணி கிளம்புகிறது. குழப்ப முனையும்போது கைகலப்பு, அடிதடி, கொத்துவெட்டு வன்செயல்கள் நிறைவே இடம்பெறுகின்றன.

அடுத்து அந்த வன்செயல்களுக்காக பழிவாங்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகின்றன.

இப்படியே வடக்கு - கிழக்கில் வன்செயல்கள் சங்கிலித்தொடராக இடம்பெற்று வருகின்றன.

சமீபகால சம்பவங்களை வரிசைப்படுத்தி கூறுவதானால் -

திருகோணமலையில் வீதிகளில் சென்று கொண்டிருந்த இரண்டு அப்பாவிப் பெண்கள் படையினரால் சுட்டுக் காயப்படுத்தப்பட்ட சம்பவம் -

திருக்கோயிலில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரை விசேட அதிரடிப்படையினர் தாறுமாறாக தாக்கிவிட்டு அவரை பொலீஸில் ஒப்படைத்த சம்பவம் -

தீவுப் பகுதிகளில், வேலணையில் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரமுகர் ஒருவரும் மற்றொரு உறுப்பினரும் மோசமாக தாக்கப்பட்டதோடு அவர்களை கொலை செய்வதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்ட சம்பவம் -

மூதூரில் சிலுவைகள் உடைப்பு, புலிகளின் அலுவலகம் அழிப்பு, ஹர்த்தாலின்போது நடந்த கல் வீச்சு, கொத்துவெட்டு, ஆள்கடத்தல் சம்பவங்கள் -

இவை அனைத்தும் சமாதான முயற்சிகளை சிதைப்பதில் பெரும் பங்குவகித்தவை.

இவற்றை எல்லாம் உன்னிப்பாக பார்ப்பவர்கள் ஒரே ஒரு முடிவுக்குத்தான் வரக்கூடியதாக இருக்கும்.

அதாவது சமாதான முயற்சிகளுக்கு ஆரம்பத்திலிருந்தே தடைக்கற்களாக இருந்துவரும் படையினரின் ஒரு சாரார் தாம் நேரடியாகவும் தமக்கு ஆதரவானவர்களுக்கு உருவேற்றி அவர்களை தூண்டிவிட்டும் வன்செயல்கள்மூலம் அராஜக நிலையை ஏற்படுத்தி சமாதான முயற்சிகளை சிதைக்க முனைகிறார்கள் என்பதுதான் அந்த முடிவு.

கிழக்கில் இணைந்து வாழவேண்டிய தமிழ் - முஸ்லிம் மக்களிடையே சித்து விளையாடி அவர்களை சீண்டுமுடிந்து விடும் துரோகச் செயல்களிலும் இந்த நாசகார சக்திகள் ஈடுபட்டு வருகின்றன.

என்ன நடந்தாலும் இரு சமூகங்களும் உணர்ச்சிவசப்படாமல் தீயசக்திகளின் நயவஞ்சக நோக்கத்தை புரிந்துகொண்டு நிதானமாக நடக்கவேண்டும்.

அவர்களைப் போலத்தான் புலிகளும் இப்போதுபோல எப்போதும் பொறுமைகாத்து சமாதான முன்னெடுப்புக்கள் வெற்றிபெற தமது பங்களிப்பைச் செய்யவேண்டும்.

உறங்கிய யுவதியின் சங்கிலி வீட்டினுள் புகுந்து அபகரிப்பு!

புகைக்கூண்டு வழியாக இறங்கி கைவரிசை

வீட்டினுள் நுழைந்த திருடர் கும்பல் உறக்கத்திலிருந்த யுவதியின் கழுதிலிருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்ற சம்பவம் நீர்வேலி வடக்கு குறுக்குத் தெருவில் அமைந்துள்ள வீடொன்றில் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்றது.

சம்பந்தப்பட்ட வீட்டின் சமயலறைப் புகைக்கூண்டில் அமைக்கப்பட்டிருந்த துவாரத்தினூடாக சிறுவனொருவனை வீட்டினுள இறக்கிய திருடர்கள் அச்சிறுவன் மூலம் தாழ்ப்பாழ்களை நீக்கி கதவுகளைத் திறப்பித்த பின்னர் வீட்டினுள்ளே நுழைந்ததாகக் கூறப்படுகிறது.

அங்கே உறக்கத்திலிருந்த யுவதியின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அபகரித்ததாகவும் - அதே வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த மற்றொரு யுவதியின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அபகரிக்க முயற்சித்தவேளை அந்த யுவதி விழித்துக் கூச்சலிட்டதாகவும் -

இதனையடுத்தே திருடர் குழு தப்பிச்சென்றதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற அதே தினமிரவு புத்தூர்ச் சந்தியில் உள்ள பலசரக்கு கடை ஒன்று உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த பொருள்கள் களவாடப்பட்டன. புத்தூர்ச் சந்தியில் க.சிவானந்தராசா என்பவருக்குச் சொந்தமான இந்தப் பலசரக்கு கடையின் கூரையைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதிவாய்ந்த பொருள்களைத் திருடிச் சென்றுள்ளதாகக் கூறப்பட்டது. (ஒ-69-178)

வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் ஜே.வி.பிக்கு எதிராகப் போராடுவோம்

ஐக்கிய சோஷலிசக் கட்சி செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜுன்27

சமாதானத்தைக் குழப்பும் ஜே.வி.பி. போன்ற இனவாதக் கட்சிகளுக்கு எதிராக வடபகுதியில் மட்டுமல்ல தென்பகுதியிலும் வீதியில் இறங்கிப் போராடுவோம்.

யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் ஜே.வி.பியின் சமாதான விரோதப் போக்கைக் கண்டித்து ஐக்கிய சோஷலிசக் கட்சி மேற்கொண்ட மறியற்போராட்டத்தின்போது உரையாற்றிய அக்கட்சியின் யாழ்.மாவட்டச் செயலர் க.தேவதாசன் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் ஆட்சிபீடம் ஏறுகின்ற முதலாளித்துவ அரசாங்கங்கள் ஒருபோதும் இனப்பிரச்சினையைத் தீர்க்கப் போவதில்லை என்று ஐக்கிய சோஷலிசக் கட்சியினராகிய நாங்கள் நம்புகின்றோம். ஆயினும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு சமாதானச் சூழலை ஓரளவிற்கு ஏற்படுத்தியுள்ளது. இதனை நாம் வரவேற்கின்றோம்.

இச்சமாதானச் சூழலையும் சமாதான முயற்சிகளையும் எவரும் ஒருபோதும் குழப்பக்கூடாது. இனவாதக் கட்சிகளின் எதிர்ப்பைக் கண்டு சமாதானப் பேச்சுக்களைத் தாமதிக்காமல் அவற்றை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும் என்று பிரதமரைக் கேட்டுக்கொள்கிறோம். அதற்காகவே நாம் இன்று இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் என்றார். (ம-10-173-ரி)

மட்டக்களப்புப் பகுதியில்

இரு பாடசாலைகளிலிருந்து பொலீஸார் வெளியேறினர்

கொழும்பு,ஜுன்27

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிள்ளையாரடி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, களுவாஞ்சிக்குடி விநாயகர் வித்தியாலயம் ஆகியவற்றில் தங்கியிருந்த பொலீஸார் வெளியேறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பிள்ளையாரடி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் இருந்த விசேட அதிரடிப்படையினர் இடமாற்றப்பட்டு பாடசாலை முழுமையாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று பொலீஸார் இவ்வளவு காலமும் பயன்படுத்தி வந்த களுவாஞ்சிக்குடி விநாயகர் வித்தியாலயமும் முற்றாக பாடசாலை நிர்வாகத்திடம் ஒப் படைக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் திமிலதீவு புனிதப் பிரதேசத்திலிருந்து விரைவில படையினர் வாபஸ் பெறப படுவர் என உயர் அதிகாரி ஒருவர் வாக்குறுதி அளித்துள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-12-6)

கல்வியியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பிப்போருக்கு!

யாழ்ப்பாணம்,ஜுன்27

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்கும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் தமது பெயர், சுட்டெண் மற்றும் இதர விடயங்களை தெளிவாகவும், சரியாகவும் குறிப்பிடுமாறு யாழ்.கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி தி.கமலநாதன் தெரிவித்துள்ளார்.

கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் விவரங்கள் யாவும் கணனிமூலம் பரிசோதிக்கப்படுவதால் விவரங்களைத் தெளிவின்றி குறிப்பிடும் விண்ணப்பதாரிகள் அனுமதி பெறும் வாய்ப்பை இழக்க நேரிடுவதாகவும் - இதே போன்று கடந்தகாலங்களில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பல மாணவர்கள் பாதிக்கப்பட்டமையால் இதனைக் கருத்திற் கொண்டே மேற்படி அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார்.

அண்மையில் கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ஒ-ரி)

மடுமாதா ஆலய யாத்திரிகர்க்கு மன்னார் ஆயரின் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,ஜுன்27

மன்னார் மடுமாதா ஆலய வருடாந்த திருவிழாக்கள் ஒன்பது நாள் ஆயத்த நவநாள்களுடன் எதிர்வரும் ஜுலை 2ஆம் திகதியும், ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன.

இத்திருவிழாக்களில் பங்குபற்றச் செல்லும் யாத்திரிகர்களின் நலன்கருதி மன்னார் மறைமாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகை அறிவுறுத்தல் குறிப்பு ஒன்றை விடுத்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

★ திருவிழாவிற்கு வரும் யாத்திரிகர்கள் மடு வீதிச் சந்தியிலிருந்து மடு ஆலயம் வரையுள்ள வழமையான பாதையினை ஜுன் 20ஆம் திகதி முதல் ஜுலை 4ஆம் திகதி வரை ஜுலைத் திருவிழாவிற்கும், ஓகஸ்ட் 4ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 19ஆம் திகதி வரை ஓகஸ்ட் திருவிழாவிற்கும பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

★ தேவாலயத்துக்கு வரும் யாத்திரிகர்கள் ஒவ்வொருவரும் தத்தமது அடையாள அட்டையினைத் தம்முடன் வைத்திருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

★ வாகனத்தில் பயணம் செய்பவர்கள் மடு வீதி சோதனை வசதி கருதி தாம் பயணிக்கும் வாகனத்தின் விவரங்களையும் பயணிகளின் பெயர்கள், அடையாள அட்டை இலக்கம் என்பவற்றைக் கொண்ட பட்டியலையும் தயாரித்துத் தம்முடன் எடுத்து வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். இப்பாதை காலை 7.00 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை திருவிழா காலத்தில் திறந்து வைக்கப்பட்டிருக்கும். திருவிழாவுக்கு அண்மித்த நாள்களில் மடுரோட் சோதனை நிலையம் மூடும் நேரம் நீடிக்கப்படக்கூடும்.

★ யாத்திரிகர்கள் தமது நாளாந்த பாவனைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை மட்டும் தம்முடன் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

★ வியாபாரப் பொருள்கள் எதுவாயினும் இப்பாதை வழியாக அனுமதிக்கப்படமாட்டாது. எனவே அப்பொருள்களைக் கொண்டு வருபவர்கள் வழமைபோல் உயிலங்குளம் பாதை ஊடாகவே பயணிக்கவேண்டும்.

★ திருத்தலப் பகுதியில் மதுபான வகைகள் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளன. இவற்றை மடுத்திருபதிக்குள் எடுத்து வரக்கூடாது.

இவ்வாறு மன்னார் ஆயர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ-8)

நாளை

ஆனி 14
வெள்ளிக்கிழமை
(28.06.2002)
திதி : சதுர்த்தி
பின்னிரவு 4.54 வரை.
நட்சத்திரம்: திருவோணம்
நண்பகல் 2.06 வரை.
சங்கடஹர சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 5.55 - 7.25
ராகுகாலம் : 10.25 - 11.55
(பழைய நேரப்படி)

உதயவாக்கு

தனிமனிதனுக்காக உயிரை விடுபவரைவிட இலட்சியத்துக்காக உயிரை விடுபவரே சிறந்த தியாகி.

சின்னஞ்சிறு விளம்பரம்

வகுப்புகள்

O/L 2002 பரீட்சை மாணவர்களுக்கான மாலை வகுப்புகள். ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், தமிழ், வர்த்தகம் சிறுதொகை மாணவர்களுடன். தனித்தனிக் கவனம். சித்தி பெறுவது உறுதி. 426 (302),காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (5235)

இலகு திருமண சேவை

1975, திருவோணம், செவ்வாயற்ற Computer Science III சித்தியடைந்த U.K. வதிவுடமையுள்ளவருக்கு அழகான, படித்த பெண் தேவை. விரைவில் வரவுள்ளார். உள்ளூர், வெளியூர் மணமக்களுக்கு தொடர்புகொள்ளவும். துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (5154)

தவறிவிட்டது

சில்லாலையைச் சேர்ந்த சலூயிஸ தர்மகுலசிங்கம் என்பவரது தேசிய அடையாள அட்டை(இல.510410599V), சாரதி அனுமதிப்பத்திரம் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ச.லூ.தர்மகுலசிங்கம், சில்லாலை, பண்டத்தரிப்பு என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (5236)

அபூர்வ ஜோதிடம்

யோக சக்தியுள்ள சித்தர் ஏட்டில தீராத நோய் மருண்டோடல், அதிர்ஷ்ட பலன் அறிதல். தொடர்பு: சனி, ஞாயிறு 8.30-12.30 ஆடிய பாதம் வீதி, சரஸ்வதி மில் லேன், கொக்குவில் கிழக்கு. (5226)

காணி விற்பனைக்கு

நான்கு பரப்புடன் கூடிய அரிசி ஆலை (கோட்டா மில்) விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: சி.கனகலிங்கம், அழகர் அரிசி ஆலை, ஞானசம்பந்தர் வீதி, வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை. (5221)

O/Lஇல் வர்த்தகம் கற்காத மாணவர்களுக்கு!

A/L 2004
கணக்கீடு
D.SAM

ஆரம்பம்: 29.06.2002
சனி மதியம் 12 மணி

(C/22663)

வடக்கு - கிழக்கு மாகாண சுற்றுலா விடுதிக்கு இடம் தேவை

வடக்கு- கிழக்கு மாகாண சுற்றுலா விடுதியாகப் பயன்படுத்துவதற்கு யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் அல்லது அதன் எல்லைப்புறத்தில் வீடு ஒன்று விற்பனைக்கு அல்லது வாடகைக்குத் தேவை. குறைந்தது நான்கு அறைகள் கொண்டதாகவும், குளியலறை, மின்சாரவசதி, நீர்வசதி, வாகனத்தரிப்பிடத்திற்கான நிலம் என்பவற்றைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

30.06.2002 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

கலாநிதி க.குணராசா
பிராந்திய ஆணையாளர்,
48, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(C 22699)

தேவை

தனியார் புத்தகங்கள், காகிதாதிகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள விற்பனை நிலையத்தை முழுமையாக நிர்வகிக்கக் கூடிய ஒருவரும், விற்பனை உதவியாளர்களும், போட்டோப் பிரதி இயக்குநரும் தேவை. முன் அனுபவமுள்ளவர்களும், புதிதாகப் பழக விரும்புபவர்களும் (ஆண்கள்) விண்ணப்பிக்கலாம்.

☆ மேலதிக நேர வேலை செய்யக்கூடியவர்களுக்கும், 30 வயதிற்கு உட்பட்டோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப இறுதித் திகதி:- 2002.07.01

தொடர்பு: விளம்பர இலக்கம் 1549,
மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

துயர் பகிர்கின்றோம்

எமது வித்தியாலயத்தின் ஆசிரியரான

செல்வி மனோரஞ்சினி பாலசிங்கம்

அவர்களது அன்புத் தாயார்

திருமதி மகேஸ்வரி பாலசிங்கம்

அவர்கள் (23.06.2002) காலமானதையிட்டு துயருறுவதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/நாரந்தனை
றோ.க.மகாவித்தியாலயம்,
நாரந்தனை

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்.

(5249)

மரண அறிவித்தல்கள்

ஞானமுத்து திருச்செல்வம்

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் சக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானமுத்து திருச்செல்வம் 25.06.2002 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (26.06.2002) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து பழைய கோயிலடி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
மகன் - பிறான்சிஸ்சேவியர் (ஜேச்)
லண்டன்.

அல்வாய் வடக்கு,
சக்கோட்டை.

(5261)

திருமதி சரவணமுத்து மகேஸ்வரி

கல்வயலைப் பிறப்பிடமாகவும் கச்சாய் வடக்கு, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரவணமுத்து மகேஸ்வரி நேற்று (26-06-2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து அவர்களின் அன்பு மனைவியும், சபாநாயகம் (வானதி புடைவையகம், கொடிகாமம்), சத்தியமூர்த்தி (மலேரியா தடைப்பகுதி, வரணி), சர்வேஸ்வரன் (இத்தாலி), நாகேந்திர ராணி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27-06-2002) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் கொற்புலவு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: S.S.சபா,
S.சத்தியமூர்த்தி.

கச்சாய் வடக்கு, கொடிகாமம். (5267)

சுகாதார அலுவலர் நியமிக்க கோரிக்கை

வடமராட்சி கிழக்கு, ஜூன்27

பளைப் பிரதேசத்திற்கு பொதுச் சுகாதார உத்தியோகத்தர் ஒருவர் இதுவரை நியமிக்கப்படாதது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு பொதுமக்கள் கொண்டு வந்துள்ளார்கள்.

அப்பகுதியில் மக்கள் மீளக் குடியேறிவரும் நிலையில், தொற்று நோய்கள் பரவாமல் சுகாதார முற்காப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியநிலையில் பொதுச் சுகாதார உத்தியோகத்தர் நியமிக்கப்படாமையையிட்டு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஒ-182)

சுப்பிரமணியம் பூங்காவில் துப்புரவுப் பணி

யாழ்ப்பாணம்,ஜூன்27

யாழ்ப்பாண பொது நூலகத்துக்கு முன்பாக உள்ள சுப்பிரமணிய பூங்கா துப்புரவு செய்யப்பட்டு வருகிறது.

யுத்த அனர்த்தத்தால் அடியோடு அழிந்த இந்தப் பூங்கா கவனிப்பாரற்று பற்றைகள் மண்டிக்கிடந்தது.

தற்போது யாழ்.மாநகரசபை ஊழியர்கள் பற்றைகளை வெட்டி அகற்றி பூங்காவைத் துப்புரவு செய்து வருகின்றனர். (ஒ-6)

பஸ்சேவையை நீடிக்கும்படி கோரிக்கை

சன்டிலிப்பாய்,ஜூன்27

யாழ்.மத்திய பஸ் நிலையத்திருந்து சுன்னாகம், மல்லாகம், அளவெட்டி ஆகிய இடங்களுக்கு ஊடாக பெரியவிளான் சந்திவரை நடாத்தப்பட்டுவரும் 798 இலக்க பஸ்சேவையை பண்டத்தரிப்பு பகுதி மக்களின் நலன் கருது பண்டத்தரிப்பு சந்திவரை நீடிக்குமாறு பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்தி சங்கம் வடபிராந்திய போக்குவரத்து சபை யாழ்.சாலை முகாமையாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஒ-135)

கண்ணீர் அஞ்சலி

பச்சிலைப்பள்ளப் பிரதேச சபையில் கடமையாற்றும் சக உத்தியோகத்தர்கள்
திரு.தா.அருமைநாதன் அவர்களது அன்புத் தாயாரும்
திரு.க.பாலசுப்பிரமணியம், திருமதி அன்னமுத்து தர்மகுலசிங்கம்
அவர்களது அன்பு மாமியாருமாகிய

திருமதி செல்லம்மா தாமோதரம்பிள்ளை (பளை)

அவர்கள் 23.06.2002 அன்று காலமானதையிட்டு நாம் ஆழ்ந்த துயரமடைகின்றோம். அவரது பிரிவினால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை. (5272) உறுப்பினர், உத்தியோகத்தர்.

45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 26 09 1985

உதிர்வு 14 05 2002

செல்வி அமிர்தலிங்கம் லதா

(A/L கலைப்பிரிவு மாணவி 2004)

எங்கள் அன்புக்குட்டி லதா!
உன் புன்சிரிப்பைக் காணவில்லை!
அனைவரையும் அரவணைத்த அன்புருவமே
பாதியில் போனதோ உன் வாழ்வு?
உயர் கல்வியைத் தொடருமுன் வீதியில்
வந்தானே லொறி என்னும் உருவில் காலன்
தவியாய்த் தவிக்கின்றோம் - நாம் ஆண்டாண்டு
சென்றாலும் துன்பந்தீருமோ? எம் துயரம் மாறுமோ?
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(5269)

புறப்பொறுக்கி ஆலடி,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

உங்கள் பிரிவால் துயறுறும்:
அப்பா, அம்மா, அண்ணாமார், அக்கா - அத்தான், பெறாமக்கள், மாமி, பெரியப்பா, உற்றார், உறவினர், நண்பர்கள்.

BIT அனுமதி அட்டைகள்

கொழும்புப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் BIT பட்டப்படிப்புக் கற்கை நெறிக்கு எமது நிறுவனத்தினூடாக விண்ணப்பித்த மாணவர்களுக்கான தெரிவுப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகளை பரீட்சைத் திகதியான 30-06-2002 ற்கு முன்பாக தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி.

மிருதுவான, தூய்மையான, அழகிய சருமத்திற்கு கற்றாளைச்சாறு, கொகும்பட்டர், கிளிசரின் அடங்கிய வாசனை சோப்.
சகல விதமான சருமங்களுக்கும் ஏற்ப சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது.

சந்தைப்படுத்துவோர் PHARMCO MARKETING SERVICES (PVT) LTD.

Raj Advertising

தமது தலைவரைத் தெரிவுசெய்வது பலஸ்தீனர்களின் சொந்த விடயம்

புஷ்ஷின் யோசனைக்கு அரபாத் பதிலடி!

ரமழா,ஜூன்27

தமது தலைவரைத்தெரிவுசெய்வது பலஸ்தீனர்களை மட்டுமே சார்ந்த விடயம். அதில் பிறருடைய ஆலோசனை அவர்களுக்குத் தேவையில்லை.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்.

பலஸ்தீனத் தலைமை மாற்றப்பட வேண்டும் என்று அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்ததற்குப் பதிலடியாகவே அரபாத் இப்படிக் கூறியுள்ளார்.

தான் ஜனநாயக முறைப்படி மக்களால் தெரிவுசெய்யப்பட்டே பலஸ்தீன அதிகாரசபையின் தலைவராகப் பதவியேற்றதாகவும் அரபாத் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் பலஸ்தீன அதிகாரசபையில் மறுசீரமைப்பை மேற்கொள்ளவும், அடுத்த ஆண்டின் முற்பகுதியில் தேர்தல் நடத்தவும் இருப்பதை அரபாத் மீண்டும் வலியுறுத்தினார்.

இவற்றின்மூலம் புஷ்ஷின் உரையை வெற்றிகரமாக எதிர்கொண்டு சமாளிக்க அரபாத் முயற்சிப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்.

அமெரிக்க அதிபர் வெள்ளை மாளிகையில் நடந்த ஒரு கூட்டத்தில் பேசும்போது, 'அடுத்துவரும் 3 ஆண்டுகளுக்குள் பலஸ்தீன நாடு உருவாக வேண்டுமானால், பயங்கரவாதத்

துக்குத் தலைவணங்காத ஜனநாயகத் தலைவர் ஒருவரை பலஸ்தீனர்கள் தமது தலைவராகத் தெரிந்தெடுக்க வேண்டும். அவ்வாறு நடைபெற்றால் பலஸ்தீன அதிகாரசபைக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் முழு அளவிலான பலஸ்தீன நாடு உருவாக அமெரிக்கா ஆதரவளிக்கும்'

- என்று தெரிவித்திருந்தார்.

புஷ்ஷின் இந்த நிபந்தனையை அரபாத் உட்பட பலஸ்தீன மூத்த அதிகாரிகள் அனைவரும் நிராகரித்துள்ளனர்.

அரபாத் தலைமையில் ஒன்றுபட்டு சுதந்திரத் தனிநாடு அமைக்கப் போராடிவரும் பலஸ்தீன மக்களை, தனிநாடு அமைக்க ஆதரவு தருவதாக ஆசைகாட்டி, அரபாத்துக்கு எதிராக அவர்களைச் செயற்படவைத்து, இறுதியில் பலஸ்தீனப் போராட்டத்தையே முற்றாக அழித்துவிட அமெரிக்கா மேற்கொண்டுள்ள சதி நடவடிக்கையே அதிபர் புஷ்ஷின் உரை என்று பலஸ்தீனத் தீவிரவாத அமைப்புகளில் ஒன்றின் பேச்சாளர் தெரிவித்தார்.

பலஸ்தீனத் தலைமை மாற்றப்பட கால அவகாசம் விதித்த அதிபர் புஷ், பலஸ்தீனப் பிரதேசத்தை ஆக்கிரமித்துள்ள இஸ்ரேலியப் படைகள் வெளியேற வேண்டும் என்று கோரியுள்ளபோதும், அதற்கான கால அட்டவணை எதனையும் வெளியிடவில்லை என்பதனைச் சுட்டிக்காட்டிய அந்தப் பேச்சாளர், இது அமெரிக்காவின் வஞ்சக எண்ணத்தை அப்பட்டமாக வெளிப்படுத்துவதாகவும் குறிப்பிட்டார்.

தன்ஸானிய ரயில் விபத்தில் 200 பேர் வரை உயிரிழப்பு!

டோடோமா,ஜூன்27

தன்ஸானியாவில் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்ற ரயில் விபத்தில் 200 பேர் வரை உயிரிழந்துள்ளனர். மேலும் சுமார் 900 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

நாட்டின் நிர்வாகத் தலைநகரான டோடோமாவில் இந்த விபத்து இடம் பெற்றது.

ரயில் விபத்து நடந்த இடத்தின கோரக்காட்சி....

இந்த விபத்துக்கு ரயில் சாரதியின் மெத்தனமே காரணம் எனக் கூறப்படுகிறது.

அதிக வேகத்தில் சென்று கொண்டிருந்த பயணிகள் ரயில், ஏற்கனவே தடம் புரண்டிருந்த சரக்கு ரயிலின் பெட்டிகள் மீது மோதி உருண்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு 25 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள சிறிய ரயில் நிலையத்தை பயணிகள் ரயில் கடப்பதற்கு அனுமதி வழங்கப்படாத போதும் பயணிகள்ரயிலின் சாரதி அதனைக்கவனியாது ரயிலை செலுத்தியதாக கூறப்படுகிறது.

இதனாலேயே கவிழ்ந்திருந்த சரக்கு ரயிலின் பெட்டிகள் மீது பயணிகள் ரயில் மோதி விபத்து ஏற்பட்டதாக தன்சானிய ரயில்வே அமைச்சகம் அறிவித்துள்ளது. தன்சானியாவில் பாரிய உயிரிழப்புக்கள் ஏற்பட்ட ரயில் விபத்து இடம்பெற்றிருப்பது இதுவே முதல் தடவை என்று கூறப்படுகிறது. (ஒ-9)

இந்தோனேஷியாவில்

எம்.பிக்கள் பெயர் தெரியாத வாக்காளப் பெருமக்கள்

ஜகார்த்தா,ஜூன்27

இந்தோனேஷியாவில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களித்தவர்களில 96 சதவீதமானவர்களுக்கு தங்கள் தொகுதி நாடாளுமன்ற உறுப்

பினர்களின் பெயரே தெரியாதாம்.

டெய்லர் நெல்சன் சாப்ரஸ் என்ற நிறுவனம் அங்கு நடத்திய கருத்துக்கணிப்பில் ஆச்சரியம் தரும் இத்தகவல் தெரியவந்தது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்றது. இந்தோனேஷிய மக்களெல்லாம் அலை அலையாக திரண்டுவந்து உற்சாகமாக வாக்களித்தனர்.

அங்கு தொகுதியொன்றில் தெரிவு செய்யப்பட்ட எம்.பியின் பெயர் எத்தனை வாக்காளப் பெருமக்களுக்கு தெரிந்திருக்கிறது என்பதை அறிவதற்காக அங்கு கணக்கெடுப்புச் செய்யப்பட்டது.

அதில்தான் 96 சதவீதமான வாக்காளர்களுக்கு தமது தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயரே தெரியவில்லை என்றவிடயம் வெளிவந்தது. ஆக 4 சதவீதமான மக்களுக்குத்தான் நாடாளுமன்ற உறுப்பினரின் பெயரைச் சொல்லமுடிந்ததாம். (ஒ-9)

நேபாளத்தில் 88 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை!

காத்மண்டு,ஜூன்27

நேபாளத்தின் மாவோயிஸ தீவிரவாதிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையே கடந்த 4 நாள்களாக இடம் பெற்ற மோதலில் 88 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு மட்டும் நடந்த சண்டையில் பல பெண் தீவிரவாதிகள் உட்பட 50 பேர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

அரிசோனா காட்டுத்தீ அழிவு பேரனர்த்தமாகப் பிரகடனம்!

நியூயோர்க்,ஜூன்27

அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தில் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் மூண்ட காட்டுத்தீயை அமெ



காட்டுத் தீயால் எழுந்த புகைமூட்டம்.

• ரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் 'மாபெரும் அழிவு' என பிரகடனப்படுத்தியுள்ளார்.

அமெரிக்க வரலாற்றில் காட்டுத் தீயினால் ஏற்பட்ட மோசமான பேரழிவு இது எனக கூறப்படுகிறது.

இந்தக் காட்டுத் தீ மூலம் அமெரிக்கா கடும் நெருக்கடியான நிலையை எதிர்நோக்கியுள்ளதாகவும் புஷ் தெரிவித்தார்.

தற்போது வரை 240 சதுரகிலோ மீற்றர் விஸ்தீரணமுள்ள ஷோலோ நகரம் காட்டுத் தீயில் எரிந்துவிட்டது. தீ மேலும் பரவிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரிசோனா காட்டின் இரு இடங்களில் ஏற்பட்டுள்ள பாரிய காட்டுத் தீப்பிழம்புகள் ஒன்றாக இணைந்து மிகப்பெருஞ்சேதத்தை விளைவிக்கக் கூடிய ஆபத்து உருவாகியுள்ளது. இத்தீப் பிழம்புகளை ஒன்றிணையாது தடுப்பதில் அமெரிக்க தீயணைப்புப் படையினர் முழுவீச்சாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவ்வாறு இத்தீப்பிளம்புகள் ஒன்றிணைந்தால் அழிவுகள் மேலும் பலமடங்காகும் என அஞ்சப்படுகிறது.

தீ மேலும் பரவலாம் என அஞ்சி வட மேற்குப் பீனிக்ஸ் நகரப் பகுதியிலிருந்து 240 கிலோமீற்றர் தூரம் வரை மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். பைன்டாப், லின்டென் மற்றும் கிளேஸ்பிரிங் ஆகிய நகரங்களிலிந்தும 8ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை வரை 150 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான வனப்பகுதி எரிந்து நாசமாக்கியுளளது. தற்போது செடிஸ்கி பகுதியிலும் 50 ஆயிரம் ஏக்கர் வனப்பகுதி தீயினால் பொசுங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடைசியாகக் கிடைத்த தகவலின படி காற்று ஓரளவுக்கு மந்தமாக வீசுவதாகவும், எனினும் தீ தொடர்ந்து பரவக் கொண்டிருப்பதாகவும் அறிய முடிகிறது.

இதேவேளை, காட்டுத் தீ மூண்டது தெரிந்தும் நடவடிக்கை எடுப்பதில் அசிரத்தையாக இருந்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட தீயணைப்புப்படை அதிகாரி ரெர்ரிபார்டன் தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

அவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமானால் அமெரிக்க அரசால அவர் கடுமையாகத் தண்டிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-9)

ரஷ்யாவில் பெருவெள்ளம்; இரு நகரங்கள் மூழ்கின!

46பேர் பலி; 180பேரைக் காணவில்லை!

மொஸ்கோ,ஜூன்27

ரஷ்யாவின் செச்சினியா மற்றும் காக்கஸஸின் வடபிரதேசம் என்பவற்றில் ஏற்பட்டுள்ள பெரும் வெள்ளப் பெருக்குக் காரணமாக 46பேர்

வெள்ளத்தால் சூழப்பட்ட வீட்டிலிருந்து வெளியேறும் இருவர்.

பலியாகி உள்ளனர்; மேலும் 180 பேர்வரை காணாமற்போயுள்ளனர்.

தொடர்ந்து பெருமழை பெய்வதால் உயிரிழப்புக்கள் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

ஏற்கனவே செச்சினியா மற்றும் காக்கஸஸ் பகுதிகளில் இருந்து 55 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என அங்கிருந்துவரும் செய்திகள் கூறுகின்றன.

வீதிகளும், புகையிரதப் பாதைகளும் வெள்ளத்தால் மூடப்பட்டுள்ளன. மின்கம்பங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதால் பெரும்பாலான பகுதிகள் இரவில் இருளில் மூழ்கியுள்ளன.

இங்குஷ்தியா, தெற்கு ஒசெட்டியா, செச்சினியா போன்ற பகுதிகளில் ஏற்பட்ட பெருமழையே இந்த வெள்ள அனர்த்தத்துக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த சில நாள்களுக்கு பெருமழை தொடரும் எனவும் இதனால் ஆறுகளில் நீர் மட்டம் அபாயகரமான விதத்தில் உயருமெனவும் -

ரஷ்ய வானிலை ஆராய்ச்சி நிறுவனம் எச்சரித்துள்ளது.

மீட்புப் பணிகள் தீவிரமாக முடக்கிவிடப்பட்டுள்ளன. பாரிய கட்டடங்களின் உச்சிகளில் ஏறிநின்ற மக்கள் ஹெலிகொப்ரர்களின் மூலம் மீட்கப்பட்டுவருகின்றனர்.

பெரும்பாலான மரணங்கள், குளிர் நீரில் சிக்கி உடல் விறைத்ததாலும் அதிர்ச்சி காரணமாகவுமே ஏற்பட்டுள்ளன என ரஷ்ய அவசர உதவி அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், மீட்புப் படை செயற்படுவதற்காக அமைச்சர் சேர்கி சோகுவினை காக்கஸஸ் பிராந்தியத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மீட்பு நடவடிக்கைகளில் உதவுமாறு ரஷ்ய இராணுவத்திற்கும் அவர் உத்தரவிட்டுள்ளார்.



காட்டுத் தீயினால் எரிந்து சாம்பலான ஷோலோ நகர வீடு ஒன்று.

இறந்தவருக்கு பிறந்த குழந்தை சட்டப்படி வாரிசாக முடியாது!

ஜப்பான் நீதிமன்றம் தீர்ப்பு

இறந்த கணவனின் உயிரணு மூலம் பெண் ஒருவருக்குப் பிறந்த குழந்தையை சட்டபூர்வமாக குறிப்பிட்ட கணவருடைய வாரிசாக அங்கீகரிக்க முடியாது என ஜப்பான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஜப்பானின் மேற்குப் பகுதியைச் சேர்ந்த 30 வயதான பெண் ஒருவர், தனது கணவரின் உயிரணுவை ஜப்பான் ஆஸ்பத்திரி ஒன்றில் பாதுகாத்து வந்துள்ளார். தற்செயலாக அவரது கணவர் இறந்துபோகவே - பாதுகாக்கப்பட்டுவந்த கணவரின் உயிரணுவை பயன்படுத்தி - விஞ்ஞான முறையில் அவர் ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தார்.

குழந்தை தற்போது ஒரு வயதாகிறது. இந்நிலையில் "அக்குழந்தையை தனது கணவரின் சட்டபூர்வமான வாரிசாக அங்கீகரிக்க வேண்டும்" எனக்கோரி அந்தப் பெண் ஜப்பான் நீதிமன்றில் மனுச் செய்தார்.

ஆனால் அந்த வழக்கை தள்ளுபடி செய்த ஜப்பான் நீதிமன்று - இறந்து போன கணவரின் சொத்துகளுக்கு அந்தக் குழந்தை வாரிசாக முடியாது என்று தீர்ப்புக் கூறியுள்ளது.

வரணி ஆழ்வார் மடம்
கந்தவேற்பெருமான் ஆலய
மஹா கும்பாபிஷேகம்

மேற்படி ஆலய மஹாகும்பாபிஷேகம் ஆனித்திங்கள் 13ஆம் நாள் இன்று (27.06.2002) வியாழக்கிழமை காலை 9.00 மணி 50 நிமிடம் தொடக்கம் 11 மணிக்குள் வரும் சுபவேளையில் நடைபெறும்.

பிரதிஷ்டா குரு: பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள்
பிரதமகுரு வல்வை சிவன்கோயில்

பிரதமகுருவின் ஆசியுரையைத் தொடர்ந்து நல்லைக் குருமணி சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகளின் அருள் உரை இடம்பெறும்.

(5257) - ஆலய திருப்பணிச் சபை.

மருத்துவர்கள் இடமாற்றம்

சங்கானை அரசினர் வைத்திய சாலையில் கடமையாற்றிய பற்சிகிச்சை மருத்துவர் டாக்டர் திருமதி சந்திரிக்கா ஞானேஸ்வரன் யாழ்.அரசினர் போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரின் இடத்திற்கு யாழ்.அரசினர் போதனா வைத்திய சாலையில் பற்சிகிச்சை மருத்துவராகக கடமையாற்றிய டாக்டர் டேவிற் ரட்ண நாதன் நியமிக்கப்பட்டார்.

இதேவேளை, சங்கானை வைத்திய சாலையில் பணிபுரிந்த டாக்டர் எஸ். அம்பிகைபாகன் கொடிகாமம் அரசினர் வைத்தியசாலைக்கு இம்மாதம் தொடக்கம் இடமாற்றம் பெற்றுச் சென றுள்ளார். இவர் முன்னர் பளை அரசினா வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாகப் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-135)

யாழ் நகர வாசிகளே !

இதோ இப்போது உங்கள் தேவையறிந்து உங்கள் கரங்களுக்கும்,

உயர்தரமான மெழுகு தடவப்பட்ட பாதுகாப்பான

ALADIN WAX MATCHES

அலடின் தீப்பெட்டி

ஏக விநியோகத்தர்:
ரூபா வெர்சடைல் டிரேடர்ஸ்
!04ஏ, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம். (C/22682)

கண்ணீர் அஞ்சலி

எமது சகபீடமாகிய முகாமைத்துவ வணிகபீட 3ஆம் வருட மாணவன்
செல்வன் மகேஸ்வரன் மங்களேஸ்வரன்
அவர்கள் காலமானதையிட்டு துயருறுவதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்
(5254) யாழ். பல்கலைக்கழகம்.

31ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம் 21 - 11 - 1934
மறைவு 28 - 05 - 2002

திருமதி பூமணி சிவசுப்பிரமணியம்

கனவுகள் பல கண்டிருந்தோம்
கண்ணீரைக் தந்து சென்றீர்!
பண்பினில் சிறந்து விளங்கினீர்
பழகிடக் குழந்தையானீர்!
அன்பினில் மலர்ந்த உம்மை
ஆண்டவன் அழைத்ததேனோ?
நினைவுகள் உள்ளவரை
நெஞ்சினில் நீர் இருப்பீர்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

10 /2, புகையிரத வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (5184) - குடும்பத்தினர்.

அன்றாட செயற்பாடுகளில் நீங்கள் ஸ்தம்பிதமடைய வேண்டியதில்லை!

இடையறாத மின்சார சேவையை உறுதிப்படுத்துகிறோம்

ஜெனரேட்டர்கள்

தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்கும் ஜெனரேட்டர்களை மங்களா உங்களுக்கு வழங்குகிறது.

கற்பொழுது கையிருப்பில்

Perkings - UK.
Lister - UK.
Cummins - UK.
Denyo - Japan
Tecnic - China



27kvA-2000 kvA

அனைத்து உதிரிப்பாகங்களையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்

5 kvA-800 kvA (silent)



0.5kvA-5 kvA

மங்களா இலக்ரோனிக் சுப்பர்மார்க்கட் (பிரை) லிமிட்.,
413,காலி வீதி,வெள்ளவத்தை,கொழும்பு-6.
Tel: 587810, 585674, 508086 Fax:588813 (C/22686)

க்லோகாட் கோச்சியில் சென்றால் பரிசு

குடும்பமாக பரிசுகளை வெல்லுங்கள்
க்லோகாட் ரயிலுடன் இன்றே இணையுங்கள்

க்லோகாட் மூலம் உங்கள் குடும்பத்தினர் அனைவரும் பரிசுகளை வெல்ல இதோ ஓர் நல்ல சந்தர்ப்பம்

நீங்கள் செய்ய வேண்டியது உங்கள் பெயர், முகவரி என்பவற்றுடன் ஏதாவதொரு க்லோகாட் பெட்டி ஒன்றையும் இணைத்து அனுப்ப வேண்டியது மட்டும்தான். அத்தோடு உங்கள் விற்பனையாளரின் பெயர், முகவரி என்பவற்றையும் எழுதி அனுப்ப மறக்க வேண்டாம். நீங்கள் பரிசு வெல்லும் அதே நேரத்தில் உங்கள் விற்பனையாளரும் பரிசு வெல்வார்.

முதலாவது அதிர்ஷ்டமடையும் குடும்பத்திற்கு
21" கலர் தொலைக்காட்சி, கட் பிளையர், சலவை இயந்திரம், குளிர்சாதனப்பெட்டி என்பன பரிசுகளாகக் கிடைக்கும்

இரண்டாவதாக அதிர்ஷ்டமடையும் மூன்று குடும்பங்களுக்கு மூன்று பரிசுகள்
21" கலர் தொலைக்காட்சி, காஸ்அடுக்கு, பிளைன்ட், VCD பிளையர் ஒன்று

விற்பனையாளர்களுக்கும் பரிசு
அதிர்ஷ்டமடைந்த நான்கு குடும்பங்களின் விற்பனையாளர்களுக்கும் நான்கு லப் பரிசுகள்

ஆறுதல் பரிசுகள்
100 ஆறுதல் பரிசுகளாக ஹேமாஸ் சந்தைப்படுத்தல் வழங்கும் 100 பரிசுப் பொதிகள்

முதலாவதாக அனுப்பிவைப்போருக்கு
முதலாவதாக விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைப்போரில், 650 பேர்களுக்கும் இவர்கள் விற்பனையாளர்களுக்கும் அழகிய டிஷேட் ஒன்று

உங்கள் விண்ணப்பப்படிவங்களை இலை 19ம் திகதி 2002 இக்கு முன் அனுப்பிவைக்கவும்

க்லோகாட் கோச்சியில் சென்றால் பரிசு - த. பெ. இல. 911 கொழும்பு

Masters DDB LN: C.38/2002

க்லோகாட்

(C/22508)

வேலணைத் தாக்குதல் சம்பவத்துக்கு டக்ளஸ் கூறும் காரணம் கேலிக்கூத்தானது

வ.மா.கடற்றொழிலாளர் சமாசம் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜுன்27

மீன்பிடிக்கு வரி அறவிடுவது தொடர்பாகப் பொதுமக்களுடன் புலிகளுக்கு ஏற்பட்ட முரண்பாடே வேலணைத் தாக்குதல் சம்பவத்துக்குக் காரணம் என ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருப்பது கேலிக்கூத்தான செயலாகும்.

வேலணையில் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவித்து வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் -

விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் தமது அரசியல் பணிக்காக யாழ்.குடாநாட்டிற்கு வருகைதந்துள்ள விடுதலைப் புலிகள் எமது கடற்றொழில் மக்களிடமோ அல்லது சங்கங்களிடமோ இன்றுவரை எந்தவிதமான வரி அல்லது நிதி சம்பந்தமாக எந்தவித கோரிக்கைகளையும் முன்வைக்க வில்லையென்பதை உறுதிபடக் கூறுகின்றோம். இருக்கையில் பி.பி.சி. தமிழுக்கு வழங்கிய பேட்டியில் மீன்பிடி வரி அறவிடுவது தொடர்பாகப் பொதுமக்களுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே தாக்குதல் சம்பவம் நடைபெற்றதாக டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருப்பது கேலிக்கூத்தான ஒரு செயலாகும்.

கடற்படையினருடன் தமிழ்க்கடசியினரும் சேர்ந்து அரசியல் பிரிவினரைத் தாக்கிய பின்னர் இவ்வாறான அறிக்கைகளை வெளியிடுவது மக்களையும் விடுதலைப் புலிகளையும் வேறுபடுத்துவதற்கு எடுக்கப்படும் சதி முயற்சியாகும்.

எனவே, இவ்வாறான கூற்றுக்கள் மூலம் தற்போது உருவாகிய சமாதானமான ஒளிக்கீற்றைக் குழப்பாமல் எமது மக்கள் சமாதானத்தின்மூலம் விடிவு காண்பதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் வாய்ப்பளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

- என்று உள்ளது.

இதேசமயம், வேலணைத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் -

வேலணைத் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் கடற்படையினரும், ஈ.பி.டி.பியினரும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவர்கள். இந்தச் குற்றச் செயல் புரிந்தவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட துரித நடவடிக்கை எடுக்காவிட்டால் இது போன்ற கோழைத்தனமான செயல்கள் காட்டுத் தீபோல் எங்கும் பரவுவதற்கு இடமளிப்பதாகிவிடும்.

அரசாங்கம் முப்படைத் தளபதிகள் மூலம் போர்நிறுத்த ஒப்பந்தத்தினால் நாட்டுக்கு ஏற்படவிருக்கும் பொருளாதார வளர்ச்சி சம்பந்தமாகவும், கடந்த நான்கு மாதங்களாக உயிரிழப்புகள் போர்நிறுத்தத்தின் காரணமாகத் தவிர்க்கப்பட்டிருப்பதையும் படையினருக்கு எடுத்துரைக்க வேண்டும்.

தீவகத்தில் பாதுகாப்புப் படையினர் நடுநிலையாகச் செயற்படுவார்களேயானால் சமநிலையைப் பேணிக்காப்பதோடு, சமாதான முயற்சிகளையும் முன்னெடுத்துச் செல்ல முடியும். எல்லாவற்றுக்கும் முன்னோடியாக முப்படைகளின் தலைவி என்ற முறையில் ஜனாதிபதி, அரச படைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்குத் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றுள்ளது.

முத்துத்தம்பி வித்தியாலயத்தில் இயங்கும்

பலாலி ஆசிரியர் கலாசாலை சொந்த இடம் செல்ல வேண்டும்

பேராசிரியர் சண்முகதாஸ் கோரிக்கை

குருநகர்,ஜுன்27

பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்களது நலன்கருதியும், சைவ வித்தியாவிருத்திச் சங்க நிறைவாழ்வு இல்லச் சிறுவர் கற்றுவரும் யாழ். முத்துத்தம்பி மகாவித்தியாலய மாணவர் நலன்கருதியும் முத்துத்தம்பி மகாவித்தியாலய கட்டடங்களில் இயங்கும் பலாலி ஆசிரியர் கலாசாலை அதன் சொந்த இடத்தில் இயங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு கோரும் மஜகர் ஒன்றை பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபருக்கு திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் பேராசிரியர் அசண்முகதாஸ் அனுப்பி வைத்துள்ளார்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தற்காலிகம் எனக் கூறப்பட்ட ஒரு சிறிய கட்டடத் தொகுதிக்குள் பல நூறு ஆசிரிய மாணவர்களை வைத்து கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகக் கற்பிப்பதால் எமது மாணவர்களுக்கு நியாயமாக வந்து சேர வேண்டிய வளங்களை இழப்பதையோ - -

விறாந்தையிலும் மரநிழலிலும் கற்றும் யாழ்.முத்துத்தம்பி மகா வித்தியாலயச் சிறார்களுடைய வளங்களை அவர்களுக்குத் தொடர்ந்து கிடைக்காமற் செய்வதையோ -

நாம் அனுமதிக்கமுடியாது.

தனியார் பாடசாலைகளை அரசு சுவீகரித்தபொழுது இயற்றபட்ட சட்டப்படி பாடசாலை மூடப்பட்டால் அல்லது ஏதாவது ஒரு நிலத்தை பாடசாலை பயன்படுத்தாதுவிட்டால் அந்த நிலம் அதனை முன்னர் பரிபாலித்த நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும். யாழ்.முத்துத்தம்பி மகாவித்தியாலயமும் அது அமைந்துள்ள நிலமும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்திடமிருந்து அரசு சுவீகரித்தது. எனவே, முத்துத்தம்பி மகா வித்தியாலயம் பயன்படுத்தாத அந்நிலமும் தற்போது சைவ வித்தியா விருத்திச்சங்கப் பயன்பாட்டில் உள்ளது.

வளர்ந்த வசதியுள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் மாணவர்கள் கல்வி நிர்வாகம் அமைத்துக் கொடுக்கும் எந்த இடத்திலும் சென்று கற்கலாம். ஆனால், பல ஆண்டுகள் பள்ளிக்கூடமே செல்லாமலும், பெற்றோரை இழந்தும் அல்லது வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள பெற்றோர்களையுடையவர்களாயும் பல சிறார்கள் கல்வியின்றி உள்ளார்கள்.

இந்த நிலத்தில் வடக்குக் கோடியில பாழடைந்த நிலையிலுள்ள கழிவறைத் தொகுதியினை இடித்துப் புதிய கழிவறைத் தொகுதியை அமைக்க 'ஜீ.ரி.சற்.' நிறுவனம் பணம் ஒதுக்கியுள்ளது.

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக் கட்டடங்களிலிருந்து இராணுவத்தினர் வெறியேறவுள்ளனர் என யாழ். அரச அதிபர் எமக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

எனவே, உங்களுடைய மாணவர்களுடைய நலன்கருதியும் எங்கள் மாவட்ட வரலாற்றுச் சிறப்புடைய ஒரு கல்வி நிறுவனத்தின் மேம்பாடு கருதியும் கலாசாலையின் கட்டடத் தொகுதியனை கையேற்று உங்கள் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை அங்கு மேற்கொள்ளலாம்.

ஆசிரிய மாணவர்கள் அவர்களுக்கு நியாயமான முறையிலே உரிய வசதிகளுடைய ஓரிடத்தில் இருந்து கற்கவேண்டிய வாய்ப்பினை இழக்கவோ யாழ்.முத்துத்தம்பி மகாவித்தியால மாணவர்கள் தமக்குச் சொந்தமான வளங்களை இழந்து அவர்களுடைய கல்வி பாழடிக்கப்படுவதற்கோ நாம் ஆதரவளிக்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-51)

ஆயுதங்கள் வாங்கிய விவகாரத்தில் சீன நிறுவனங்களுக்கு நஷ்டஈடு

இலங்கை வழங்க நேரிடலாம்

கொழும்பு,ஜுன்27

கடந்த பொ.ஐ.மு. அரசினால் நிறுவனங்களிடமிருந்து வாங்கப்பட்ட ஆயுதங்கள் மற்றும் போர்ப் படகுகளுக்கான கொடுப்பனவான ஆயிரத்து 952 கோடி ரூபா இன்னும் செலுத்தப்படாத காரணத்தால் குறித்த நிறுவனங்களுக்கு இலங்கை அரசு நஷ்டஈட்டை வழங்கவேண்டி வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக்கடனை உடனடியாகச் செலுத்தும்படி சீன அரசு ஊடாக இலங்கை அரசுக்குக் குறித்த நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. ஆனால், இலங்கை அரசு கடும் நிதி நெருக்கடியை எதிர்கொள்வதால் இந்தக் கடனை உடனடியாகச் செலுத்த முடியாதிருப்பதாக இலங்கை அரசு சீன நிறுவனங்களுக்குத் தெரிவித்துள்ளது.

சீன அரசிடமிருந்து நீண்டகால வர்த்தகக் கடனைப்பெற்று இந்த நிறுவனங்களுக்கான கொடுப்பனவை மேற்கொள்ளுவது பற்றி அரசு சிந்தித்து வருகிறது.

இந்தப் பிரச்சினையில் தான் நேரடியாகச் சம்பந்தப்படமுடியாது எனச் சீன அரசு இலங்கை அரசுக்குத் தெரிவித்துவிட்டது. சீன நிறுவனங்களுடனான பிரச்சினைக்கு இலங்கை அரசே தீர்வுகாண வேண்டும் என்றே சீன அரசு கருதுவதாகக் கூறப்படுகிறது. (ஒ)

நாவலர் வழியில் நின்றொழுகிய பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் 103ஆவது பிறந்ததினம் இன்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.

ஆறுமுகநாவலரின் நேர்மாணாக்கர்களாகிய சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர், த.கைலாசபிள்ளை ஆகியோரிடம் குருசீடமுறையிலே பாடங்களைக் கேட்ட பெருமைமிக்கவர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை. அதனால் பண்டிதமணியும் நாவலர் தம் வழித்தோன்றலே. இதனையே "வள்ளுவர் உள்ளத்தை பரிமேழகரும், நாவலர் உள்ளத்தை பண்டிதமணியும் புரிந்து கொண்டனர்" என்று பாடுகின்றார் புலவர் பார்பதிநாதசிவம்.

"பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையை இலக்கிய கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவித்ததன்மூலம் இலங்கைப் பல்கலைக்கழகம் தமிழ் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய சைவர்களின் சீர்திருத்த வீரராகிய ஆறுமுகநாவலரவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்க்கல்வி, இலக்கியத் திறனாய்வு, சைவசித்தாந்தம் ஆகியவற்றின் புகழ்பூத்த மரபைக் கௌரவித்துள்ளது என்றே கூறலாம். மேற்கூறப்பட்ட முத்துறையிலும் முதன்மையாகத் திகழ்ந்தவர் பண்டிதமணி.

சொல்லிக்காட்டாது செயலிலே செய்துகாட்டிய செம்மல் பண்டிதமணி, ஆறுமுகநாவலரைப் போன்றே வாழ்வில் உண்மையான நைட்டிக பிரமச்சாரியாக வாழ்ந்தவர். சிறந்த சொற்பொழிவாளராக, திறமையான ஆசிரியராக, நேர்மையான ஆராய்ச்சியாளராக, இலக்கிய ரசிகராக, உரைநடை வல்லுநராக, சைவசித்தாந்த அறிஞராகப் பல பல துறையில் வித்தகராகத் திகழ்ந்தவர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை.

நாவலரால் உருவாக்கப்பட்ட காவிய பாடசாலையில் கற்ற பல்துறை அறிவையும் கொண்டு மதுரை தமிழ்ச் சங்கப் பரீட்சையிலே சித்தியடைந்து பண்டிதரானார் சி.கணபதிப்பிள்ளை.

யாழ்ப்பாணம் என்றால் கந்தபுராணபடனமே என்பதை நிலைநிறுத்தும் வகையில் செயற்பட்ட இவர் எழுதிய கந்தபுராண - தட்சகாண்ட உரையானது தமிழகத்திலும், ஈழத்திலும் ஒப்பிலா உரையாக ஏற்றுக்கொள்ளப்பட்டமை இதற்கோர் எடுத்துக்காட்டாகும்.

கந்தபுராண கலாசாரம், நாவலரும் கோயிலும், பாரத நவமணிகள், சைவ நற்சிந்தனை, இலக்கிய வழி, சிந்தனைச் செல்வம், சமயக் கட்டுரைகள், அத்வைத சிந்தனை, அன்பிணைந்திணை, கோயில், சிந்தனைக் களஞ்சியம், கம்பராமாயணக் காட்சிகள், இருவர் யாத்திரிகர்,

ப.ரமேஸ்

சிவராத்திரியில் சிந்திக்கத்தக்கவை, கதிர்காமவேலவன் பவனி வருகிறான் போன்ற படைப்புகள் இவரின் ஆக்கங்களே.

இவ்வாறு பல வழிகளிலும் "நாவலர் பணியே நற்பணி" என்று போற்றிவாழ்ந்தவர் பண்டிதமணி.

பண்டிதமணியின் பண்புசார் விளக்கங்களை, அறிவுரைகளை அவர்தம் மாணவர்களான ஆயிரக்கணக்கான பண்டிதர்கள், விற்பன்னர்களிடமிருந்து பெற்று அதன்படி ஒழுகுதலே நாமெல்லாம் அவருக்குச் செய்யும் நன்றிக்கடனாகும். ☆

பாவிக்கும் போது இன்பம் இறுதியில் வலிமிக்க மரணம்!

தற்போது 'எய்ட்ஸ்' நோய்க்கு இணையாக உலகை அச்சுறுத்தி - மனித குலத்தைச் சீரழிக்கும் விடயமாக உருவாகியுள்ளது போதைப் பொருள் பாவனை.

இதனை முற்றாக ஒழிக்க பெரும் முயற்சிகள் ஒருபுறம் நடந்துகொண்டிருக்க, இதயமற்றவர்களது சுய நலத்துக்காகப் போதைப்பொருள் விற்பனையும் மறுபுறம் பெருகியே வருகிறது.

ஆனாலும், குடாநாட்டில் இப்போதுதான் காலூன்ற முயற்சிக்கும் போதைப்பொருள் விற்பனையை முளையிலேயே கிள்ளியெறியும் வாய்ப்பு எமக்கு உண்டு. அதில் போதைவஸ்து என்பதும் ஒன்று. முக்கியமான கவனத்தை ஈர்ந்ததும்கூட.

யாழ்.குடாநாட்டைப் பொறுத்த வரை போதைப்பொருள்கள் என்று குறிப்பிடும்போது அனுமதிக்கப்பட்ட மதுபானங்கள், கசிப்பு, புகைப்பொருள்கள் என குறிப்பிட்ட சிலவே அறியப்பட்டுள்ளன.

ஆனால், இன்று ஏனைய போதைப் பொருள்களும் புழக்கத்திலிருக்கலாம் என்ற சந்தேகத்தை அண்மையில் யாழ் நகரில் 'கஞ்சா' கைப்பற்றப்பட்ட சம்பவம் எழுப்பியுள்ளது.

ஆகவே, போதைப்பொருள்கள் பாவனை மற்றும் போதைப்பொருள் கடத்தல் ஆகியவற்றுக்கெதிரான விழிப்புணர்ச்சியைக் குடாநாட்டில் ஏற்படுத்தவேண்டிய அவசியம் உருவாகியுள்ளது.

அத்துடன் போதைப் பழக்கத்துக்கு ஆளானவர்களை அதிலிருந்து மீட்கும் நடவடிக்கைகளும் விரிவாக்கப்பட வேண்டியவையே. போதைப்பொருள் பழக்கத்துக்கு ஆளாவோரில் இளைய தலைமுறையினரே முதலிடம் வகிக்கின்றனர். விருந்தாளிபோல் வந்து வாழவையே அடியோடு நாசமாக்கும் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையான இளைய தலைமுறையை நல்வழிப்படுத்தும் பொறுப்பு பெற்றோருக்கும், பாடசலைச் சமூகத்துக்கும் அதிகம் உண்டு.

கண்டு பிடிக்கும் வழி

போதைப்பொருளைப் பயன்படுத்துபவர்களைச் சுலபமாகக் கண்டுபிடிக்கலாம். வீட்டிலே பணம் காணாமற் போதல், அடிக்கடி கணிசமான அளவு பணம் கேட்டு அடம்பிடித்தல், உடல் நிலைகளில் மாற்றம், தள்ளாடும் நடை என பல்வேறு விதமாக போதைப் பொருள் பாவனையாளர் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வர்.

சிகிச்சை முறைகள்

போதைவஸ்து ஒரு மனிதனை உடல், உளரீதியாகப் பாதிப்பிற்கு உள்ளாக்கி நோயாளியாக்குகின்றது. இப்பாதிப்பிலிருந்து விடுபட சிகிச்சையும் குணப்படுத்தலும் இன்றியமை யாததாகும். இச்சிகிச்சைகளில் முதலில் போதைப்பொருள்கள் தொடர்பாக உடல் நிலையிலிருந்து விடுதலையும் பின்பு எண்ணத்தை மாற்றுவதுமான படிமுறைகள் காணப்படுகின்றன.

அதாவது, குறிப்பிட்ட மருந்தை ஊசி மூலம் ஏற்றி பின்னர் போதைப் பொருளைப் பாவனைக்கர்க வழங்கியோ அல்லது நுகரக் கொடுக்கும் போதோ போதையாளனின் உடலில் அசாதாரண நிலையினை உணர்வதோடு வாந்தி போன்ற ஒவ்வாமைக்கான நிலைப்பாடுகளையும் வெளிப்படுத்துவர்.

போதைவஸ்துக்கு உளவியல் ரீதியான சிகிச்சை மிகவும் அவசியம். ஏனெனில், அது அடிப்படையில் மனநிலையுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. இம்முறைக்கு கணிசமான காலப்பகுதி எடுக்கும். அதற்கு திருந்தவேண்டும், விடுபட வேண்டும் என்ற மனநிலையுடன் காணப்படும் போதையாளனின் ஒத்துழைப்பும் அவசியம் ஆகும்.

இவற்றைவிட மறைமுகமான சிகிச்சை முறைகளும் உண்டு. அதாவது போதைவஸ்தின தாக்கங்களைத் திரைப்படங்கள், நாடகங்கள், கவிதைகள் என்பனமூலம் புகுத்த முனையும்போது அவை வெற்றியளிக்கிறது.

போதைத் தாக்கத்திற்கு உள்ளாகியவர் சிகிச்சைகள்மூலம் குணமாகும்போது அவர் மீண்டும் அப்போதையினை நாடும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தக்கூடாது. இதற்கு நோயில் இருந்து மீண்டவரின் குடும்பத்தவர்கள், நண்பர்கள், அயலவர்கள் போன்றோரின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்.

இத்தகைய நிலைமைகளோடு

பிரகாசன்

யாழ்.குடாவை நோக்கும்போது போதைவஸ்துக்களைப் பயன்படுத்தியோருக்கான சிகிச்சை வசதிகள் போதியளவு காணப்படுகின்றன.

இத்தகையோரில் போதையாளர்களை இனங்கண்டு யாழ்.போதனா வைத்தியசாலை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை வைத்தியசாலை போன்றவையும் சாந்திகம், அகவொளி போன்றவையும் இங்கே பெரும் சேவையினை ஆற்றிவருகின்றன.

யாழ். குடாவைப் பொறுத்தவரை சிகிச்சைபெற வருவோர் அளவு மிகவும் குறைவு. ஆனால், நோயாளிகள் சார்பாக வந்து உரையாடுவோர் தொகை மிகவும் அதிகம். ஆகவே தமக்கிடையேயுள்ள தாழ்வுச் சிக்கலை விடுத்து சிகிச்சை பெற முனையும்போது விடுதலை என்பது உறுதியே. ★

ஊர்காவற்றுறை பிரதேச சபை

சமயா சமய சுகாதார தொழிலாளர் பதவிக்கான

விண்ணப்பம்

மேற்படி பதவிக்கு சமயாசமய அடிப்படையில் ஆள்சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அலுவலகத்தினால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி 'தலைவர்', ஊர்காவற்றுறை பிரதேச சபை, ஊர்காவற்றுறை' என்ற முகவரிக்கு 12.07.2002 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

இப்பதவிக்கான தகைமைகள் வருமாறு:

01. ஊர்காவற்றுறை பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
02. 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
03. 05ஆம் தரம் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(C/22698)

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
25.06.2002.

நா.திருச்செல்வம்
உபதலைவர்
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

கண்ணீர் அஞ்சலி

மாணிக்கவாசகர் விஜயவர்மன் (விஜி)
(எக்ஸ்போ உரிமையாளர்)

அன்னாரின் மறைவினால் துயரில் மூழ்கியிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு நாம் ஆறுதல் கூறுவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

மூர்த்தி ஐயா,
தேவன் ஐயா

தாவடி (5259)

நெஞ்சம் நெகிழ்ந்திடும் ஈராண்டு நினைவுகளில்....

திருவருளால் மலர்ந்தது 16 - 11 - 1936

திருவடி சேர்ந்தது 20 - 06 - 2000

அமரர் கந்தையா சண்முகரட்ணம்

(இளைப்பாறிய பிரதம லிகிதர், யா/தொழிற்திணைக்களம்)
திதி: 27.06.2002

உங்கள் முகத்து ஒளியினிலே
நாங்கள் முகம் மலர்ந்து வீற்றிருந்த
கலக்லப்பு வாழ்க்கையெல்லாம்
கனவாகிப் போனதையா!
கொழுந்து விட்ட மெழுகுபோல - நாம்
உருகிநிற்க எம்மையெல்லாம் பிரிய மனமின்றிப் பிரிந்தீரே!
ஈராண்டென்ன இருபது கோடி ஆண்டு மறைந்திடினும் - அப்பா
மறந்து விடோம் உங்களை நாம்.

29, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (5[illegible])

தங்களை நினைந்து வாழும்
மனைவி, மக்கள், மருமக்கள்.

கூட்டுறவு அச்சகம் இடமாற்றம்

அரியாலை,ஜுன்27

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு அச்சகம் யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள கட்டடம் ஒன்றிற்கு இடமாற்றப்பட்டுள்ளது.

இந்த அச்சகம் முன்னர் கே.கே.எஸ் வீதியில் சங்கத்தின் தலைமைக்காரியாலயத்தின் கட்டடப் பகுதியில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-17)

பஸ்சேவை குறித்து மக்கள் விசனம்

சன்டிலிப்பாய்,ஜுன்27

இளவாலையிலிருந்து காலையில் யாழ்.செல்லும் பாடசாலை சேவையில் ஈடுபடும் பஸ் தடம் எண் 788 பண்டத்தரிப்பு சந்திவரை சென்று திரும்பாது பண்டத்தரிப்பு சந்தையடியில் திரும்பி யாழ்ப்பாணம் செல்வதாகவும் -

இதனால் பண்டத்தரிப்பு சந்தியில் காத்திருக்கும் மாணவர்கள் பாதிக்கப்படுவதாகவும்-

பஸ் பண்டத்தரிப்பு சந்திவரை சென்று திரும்புவதே முறையானது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-135)

பளையில் மீண்டும் ஆயுர்வேத மருத்துவமனை

பளையில் ஆயுர்வேத வைத்தியசாலை மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

பளை பிரதேச சபையினால் புலோப்பளை வீதியில் இவ்வைத்தியசாலை தொடங்கப்பட்டுள்ளது.

அத்துடன் பளை பிரதேசசபை மக்கள் மீளக்குடியேறிய பகுதிகளில் முன்பள்ளிகளைத் திறப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. (ஒ-182)

மருதங்கேணியில் கூட்டுறவுசங்க உணவகம்

வடமராட்சிகிழக்கு,ஜுன்27

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மருதங்கேணியில் உணவகம் ஒன்றினை அமைத்து வருகின்றது. மருதங்கேணிப் பிரதேசத்தில் கடமையாற்ற வரும் அரச ஊழியர்கள் உடபட மக்களின் நலன்கருதி இங்கு உணவகம் அமைக்கப்பட்டுவருகின்றது. (ஒ-182)

கண்ணீர் அஞ்சலி

திருமதி சிவநாயகம் செல்லத்துரை

எமது கல்லூரி சமூகம் அம்மையாரின் பிரிவால் துயரடைகிறது. அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சுகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

கந்தரோடை,
சுன்னாகம். (5243)

இரண்டாம் ஆண்டு நினைவில்...

மலர்வு 14 - 06 - 1917

உதிர்வு 27 - 06 - 2000

அமரர் சூசைமாணிக்கம் பெர்னான்டோ

(S.M.FERNANDO)

புகழோடு தோன்றி
நலமுடன் வாழ்ந்து
அளவுடன் சிறப்புகள் கண்டு
அமரத்துவம் அடைந்த பெருந்தகையே!
உங்கள் நினைவு என்றும் எங்கள்
உள்ளத்தில் உறங்கும்
கருணைக் கடலின் இறைவா!
உமது பாத நிழலில் சரணடைந்த இவரின்
ஆன்மாவிற்கு நித்திய ஒளியை அருளி
உமது பேரின்ப வான்வீட்டில்
சேர்த்தருள வேண்டுகின்றோம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பெறாமகன்,
பேரன்மார், பேர்த்திமார்,
பூட்டன், பூட்டி.

105, தேவாலய வீதி,
யாழ்ப்பாணம். (5238)

வ
குப்பிளான்

திருவருள்மிகு கந்தரைக் கந்தக விநாயகர் திருக்கோயில்

நூதன இராஜகோபுர கும்பாபிஷேகம்

இன்று (27.06.2002)

அடியார்களே!

நிகழும் சித்திரபானு வருஷம் ஆனிமாதம் 13ஆம் நாள் இன்று (27.06.2002) வியாழக்கிழமை காலை 9.30மணிமுதல் முற்பகல் 11.18 மணிவரையுமுள்ள சிங்கலக்கின சுபமுகூர்த்த வேளையில் நூதன இராஜகோபுர கும்பாபிஷேகம் இடம்பெறத் திருவருள் பாலித்துள்ளது.

25.06.2002 செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.45.மணிக்கு விநாயக அனுக்ஞை, கணபதி ஹோமம் கிரியைகள் ஆரம்பமாகின.

26.06.2002 புதன்கிழமை காலை 9.00மணிக்கு ஸ்தூபி ஸ்தாபனம் நடந்தேறியது.

இன்று (27.06.2002) வியாழக்கிழமை காலை 7.00மணிக்கு யாக பூசை, மகாபூர்ணாகுதி நடைபெற்று - காலை 9.30 மணிக்கு இராஜகோபுர கும்பாபிஷேகம், நண்பகல் மாகேஸ்வர பூசை நடைபெறும்.

பிரதமகுருமணி ஆகமக் கிரியாஜோதி சிவஸ்ரீ சி.குமாரராஜக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேக நிகழ்வுகள் நடைபெறும்.

அடியார்கள் அனைவரும் வருகைதந்து எம்பெருமானை தரிசித்து அருள் பெற்றுய்வீர்களாக!

(5185)

- ஆலய பரிபாலன சபையினர்.

கள்ளுத் தவறணை உடைப்பு

வலி. வடக்கு, ஜுன்27

தெல்லிப்பழை துர்க்காபுரம் பகுதியில் அமைந்துள்ள கள்ளுத் தவறணை இனம் தெரியாதவர்களினால் இரவு நேரத்தில் சேதமாக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்திற்குச் சொந்தமான இத்தவறணையை வேறு இடத்திற்கு மாற்றும்படி பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களினால் கோரப்பட்டுள்ள சமயத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

பொதுமக்கள் அதிகம் வாழும் பகுதியில் கள்ளுத்தறணை அமைக்கப்பட்டதால் மக்கள் பல்வேறு இடையூறுகளை எதிர்நோக்கியதாலேயே இதனை அப்புறப்படுத்தும்படி வேண்டுகோள்கள் விடப்பட்டன.(ஒ-86)

இருதார மண குற்றச்சாட்டில் ஒருவர் கைது!

வலி. வடக்கு,ஜுன்27

தனக்கு திருமணமானதை மறைத்து மற்றொரு திருமணம் செய்த குற்றச்சாட்டின் பெயரில் ஐந்து பிள்ளைகளின் தந்தை ஒருவரை மானிப்பாய்ப் பொலீஸார் கைது செய்து மல்லாகம் மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

ஊரெழு மேற்கைச் சேர்ந்த மேற்படி நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து அவரை தடுப்புக் காவலில் வைக்கும்படி பணித்த நீதிவான் தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்துள்ளார்.

(ஒ-86)

உடற்கல்வி டிப்ளோமா கற்க 6 பேர் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜுன்27

விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்படும் விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கான ஒரு வருட உடற்கல்வி டிப்ளோமா பயிற்சி நெறிக்கு அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சையில் யாழ்.மாவட்டத்திலிருந்து 6 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்ட விளையாட்டு உத்தியோகத்தர்களின் விவரம் வருமாறு:-

செ.ரமணன் (தலைமையக விளையாட்டு உத்தியோகத்தர்), செ.மகிந்தன் (நல்லூர் பிரதேச செயலகம்), க.விஜிதரன் (நெடுந்தீவு), ச.சதீஸ்குமார் (சாவகச்சேரி), க.முகுந்தன் (வடமராட்சி தெற்கு மேற்கு), அ.பாஸ்கரன் (உடுவில்).

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் வடக்கு கிழக்கு மாகாண சபையால் நியமிக்கப்பட்ட விளையாட்டு உத்தியோகத்தரில் அதிக எண்ணிக்கையானோர் இப்பயிற்சி நெறிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-ரி-86)

முக்கிய அறிவித்தல்

வடமாகாண தெ.ப.பொ.கூ.ச.சமாசம்

அனைத்து பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகளும் தமது கிளைகள் மற்றும் காரியாலயங்களை மூடி இன்று (27.06.2002) வியாழக்கிழமை நடைபெறும் பேரணியில் கலந்துகொண்டு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்வதுடன், நாளை 28.06.2002 இல் நடைபெறவிருந்த பனை அழிப்புக்கெதிரான கண்டனப் பேரணி மறுஅறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளமையையும் அறியத்தருகின்றேன்.

52, சோமசுந்தரம் ஒழுங்கை,
சுண்டுக்குழி. (C/22714) - தலைவர்.

7ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 10 - 10 - 1916

மறைவு 15 - 06 - 1995

அமரர் நாகமணி முத்துச்சாமி (திருமேனி)

(முன்னாள் உரிமையாளர், கனகேஸ்வரி லொறி ரான்ஸ்போட்)

திதி:- 27.06.2002

ஆண்டுகள் ஏழு ஓடி மறைந்தாலும்,
எங்கள் அன்பு ஐயாவே!
ஆறவில்லை எம்துயரம், மாறவில்லை எம் கவலை!
உங்கள் ஆழ்ந்த அறிவுரைகள், எங்களுக்கு வழி காட்டும்!!
எங்களைத் தாளாத துயரத்தில் இருந்து மீட்டு எடுக்கும்
எங்கள் இதயம் உள்ளவரை உங்கள் நினைவு தொடர் அலைகள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவரைப் பிரார்த்திப்பதுடன்
எங்கள் கண்ணீர்ப் பூக்களையும் காணிக்கையாய்த் தருகின்றோம்.

16/12 விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (5268)

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி சோதியம்மா,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

1St YEAR Remembrance

Dr.M.Durairatnam (D.Sc.)

Died at London 03.06.2001
(Ret.Professor-University of Rio-Grande Do Norte
Brazil / Scientific Adviser International
Foundation for Science (SWEDEN)

Through Pain & Sorrow we treasure your memory with deepest love & gratitude.

Children Jeevan INDIA & Arunthathy (LONDON),
Daughter-in-law, Brother,
Sister, Brothers-in-law
Sister-in-law & Relations.

10, APPLETON SQUARE,
WESTERN RD., MITCHAM,
SURREY CR 4 3SF,
ENGLAND.

No.8 (28) CLOCK TOWER ROAD,
JAFFNA. (5271)

யாழ். மக்களின் அபிமானத்தை வென்ற TATA இப்பொழுது உங்கள் மண்ணில்.....

LPO 1313 EURO BUS

LPT 613 CAB with HALF LOAD BODY

LPT 1615 CAB with CUMMINS ENGINE

SE 1613 CHASSIS

எப்பொழுதும் உங்களுக்கான
அனைத்து சேவைகளையும்
வழங்குவதற்கு
டிமோ நிறுவனத்தின்
யாழ். மண்ணில்
தயாராக உள்ளனர்.



LPT 1613 CHASSIS

- யாராலும் வழங்கமுடியாத கவர்ச்சிகர விலைக்கழிவு.
- 1 1/2 வருடத்துக்கான அல்லது 1,50,000 கிலோ மீற்றருக்கு உத்தரவாதம்.
- யாழ். மண்ணிலேயே சகல உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
- முதன்முதலாக யாழ். மண்ணில் டிமோ நிறுவனத்தின் அங்கீகாரம்பெற்ற தொழிற்சாலை.
- நன்கு பயிற்றுவிக்கப்பட்ட இயந்திர தொழில்நுட்பவியலாளர்கள்.

யாழ். மக்களின் நலன்கருதி விசேட விலைக்கழிவுகள் ஜூலை மாதம் முதலாம் திகதி வரை அமுலில் இருக்கும். இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிடாதீர்கள்!

யாழ்ப்பாணத்தில்:
Promotors Engineering Company Pvt. Ltd.
No:844, Point Pedro Road,
Nallur, Jaffna. Tel: 021-3088

(#22687)

கொழும்பில்:
Disel & Motor Engineering Co.Ltd.
No:65, Jetawana Road, Colombo -14.
Tel: 449797, 077-742616, 338883, 3328 09 Fax:449080
E-mail:dimo@dimolanka.com

வண்ணார்பண்ணை காட்டுத்துறை

அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோயில்

மஹோற்சவம்

29.06.02	சனிக்கிழமை	பகல் 11.00மணி	கொடியேற்றம்
03.07.02	புதன்கிழமை	மாலை 6.00மணி	தண்டிகைத் திருவிழா
06.07.02	சனிக்கிழமை	மாலை 6.00மணி	சப்பரத் திருவிழா
07.07.02	ஞாயிற்றுக்கிழமை	காலை 10.00மணி	தேர் உற்சவம்
08.07.02	திங்கட்கிழமை	காலை 9.30 மணி	தீர்த்தோற்சவம்
		மாலை 5.00மணி	கொடியிறக்கம்.

(C/22697) - ஆலய அறங்காவலர்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

பல்கலைக்கழக அனுமதி கல்வியாண்டு - 2002/2003

2002 / 2003 கல்வியாண்டில் கலை / விஞ்ஞானம்/ மருத்துவம் /முகாமைத்துவம் / வர்த்தகம் / விவசாய கற்கை நெறியை யாழ். பல்கலைக்கழகத்தில் பயில்வதற்காகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான அனுமதிக் கடிதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அவரவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்கள் பின்வரும் ஆவணங்களுடன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் நேரில்வந்து தங்கள் பதிவை பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை, யாழ். பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பதிவு செய்யப்படாதோரின் பெயர்ப்பட்டியல் 10.07.2002இற்கு முன்னதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்ப வேண்டியுள்ளதால் தங்களது பதிவினை 05.07.2002இற்கு முன்னதாக மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பீடம்	திகதி	நேரம்
கலை	01.07.2002 & 02.07.2002	9.00-12.30 & 1.30-3.30
மருத்துவம் & விவசாய விஞ்ஞானம்	03.07.2002	9.00-12.30 & 1.30-3.30
முகாமைத்துவம் & வர்த்தகம்	04.07.2002	9.00-12.30 & 1.30-3.30
பௌதிகவிஞ்ஞானம் & உயிரியல் விஞ்ஞானம்	05.07.2002	9.00-12.30 & 1.30-3.30

சமர்ப்பிக்க வேண்டி ஆவணங்கள்:

1. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம்.
2. பிறப்புச் சான்றிதழ் (மூலப்பிரதியும், போட்டோப்பிரதியும்).
3. பாடசாலை விடுகைப்பத்திரம் (மூலப்பிரதியும், போட்டோப் பிரதியும்).
4. நிழற்படப் பிரதி (அளவு 2"x21/2") கறுப்பு வெள்ளை - 08.
5. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அனுப்பப்பட்ட கடிதம்.
6. தேசிய அடையாள அட்டை போட்டோப்பிரதி.
7. க.பொ.த. (உயர்தரம்) பெறுபேறும் அதன் "Z" ஸ்கோர்.
8. கட்டணங்கள்:

பதிவுக்கட்டணம் ரூபா	150/=
ஆய்வுக் கட்டணம் ரூபா	300/=
(மருத்துவம்/விஞ்ஞானம்/விவசாயம்/கலைப்பிரிவில் புவியியலை ஒரு பாடமாக எடுப்பவர்களுக்கு)	
வைத்தியக் கட்டணம் ரூபா	100/=
கைநூல் ரூபா	65/=
மாணவர் வழிகாட்டி நூல் ரூபா	10/=

முக்கிய குறிப்பு:~

வெளிமாவட்ட மாணவர்களுக்கு மட்டும்:

நேரில் வந்து பதிவு செய்ய முடியாதோர் பதிவு விண்ணப்பப் படிவத்தை உதவிப் பதிவாளர் / பரீட்சைகளும் அனுமதிகளும், யாழ்.பல்கலைக்கழகம் / உதவிப் பதிவாளர் / வவுனியா வளாகம், கொழும்பு ஸ்ரோஸ், ஈ.ஜீ 4 சென்ரல் றோட், கொழும்பு - 12 இல் பெற்று விண்ணப்பப்படிவத்தில் இடப்பட்ட கையொப்பத்தை தாங்கள் தற்போது வதியும் இடத்திலுள்ள சமாதான நீதிவானால் உறுதிப் படுத்தி, கட்டணத்தை காசுக் கட்டளையாக நிதியாளர், யாழ்.பல்கலைக்கழகம் என்ற முகவரியில் பெற்று பதிவுத்தபாலில் கேட்கப்பட்ட ஆவணங்களுடன் 05.07.2002இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக - உதவிப் பதிவாளர் / பரீட்சைகளும், அனுமதிகளும், யாழ்.பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்டோர் பெயர்ப் பட்டியல் அந்தந்த பீட விளம்பரப்பலகையிலும், நலச்சேவைகள் கிளை விளம்பரப்பலகையிலும் பார்வைக்கு இடப்பட்டுள்ளது.

- பதிவாளர்.

(C/22702)

அரசியல்வாதிகள் மீது ஊழல் முறைப்பாடுகள்

கொழும்பு,ஜுன்27

எட்டு அரசியல்வாதிகளுக்கு எதிரான முறைப்பாடுகள் குறித்து ஊழல், இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு விசாரணை செய்துவருகின்றது என்று குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

இவர்கள் அரசாங்க, எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் சொன்னார்.

இவர்களில் சிலரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் எதிர்வரும் வாரங்களில் ஏனையோரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிகிறது.

(ஒ)

கஞ்சா விற்றவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,ஜுன்27

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன ஆலய தீர்த்தத் திருவிழா அன்று ஆலயச் சுற்றாடலில் கஞ்சா விற்பனை செய்த நபருக்கு யாழ்.நீதிமன்றினால் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் குறிப்பிட்ட நபரை ஊர்காவற்றுறைப் பொலீஸார் மன்றில் ஆஜர் செய்ததை அடுத்து நேற்றுவரை அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

நேற்று மீண்டும் அவர் மன்றில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிட்ட யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.க.விக்னராஜா குறிப்பிட்ட நபரை இருபாலை கானான் சிறுவர் பராமரிப்பு இல்லத்துக்கு 2ஆயிரம் ரூபா தாமப் பணம் செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த நவரத்தினம் விக்கினேஸ்வரன்(வயது42) என்ற நபரே இவ்வாறு கஞ்சா விற்பனையில் ஈடுபட்டவராவார்.

(ஒ-10-ரி)

அளவெட்டியில் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,ஜுன்27

பிரதேச செயலகத்தின்கீழ் அபிவிருத்தித் தொண்டர் தொழில்நுட்பப் பயிற்சி பெற்றவர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு நாளைமறுதினம் சனிக்கிழமை அளவெட்டி அபிவிருத்தித் தொண்டர் பயிற்சி நிலையத்தில் முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தொழில்நுட்பப் பயிற்சிநெறிக்கான பரீட்சைகள் தொடர்பாக இந்த ஒன்றுகூடலில் ஆராயப்படவிருப்பதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர் கோரியுள்ளார்.

(ஒ)

ஞானச்சுடர் வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவக் கலை பண்பாட்டுப் பேரவையினர் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த வெள்ளி நிகழ்வில் இவ்வார நிகழ்வாக 'ஞானச்சுடர்' வெளியீடு இடம்பெறவுள்ளது.

இம்மலரின் வெளியீட்டினை சிறுப்பிட்டி கிராம உத்தியோகத்தர் க.ஸ்ரீஸ்கந்தராசாவும், மதிப்புரையை பேராசிரியர் அ.சண்முகதாஸும் நடத்துவர். இதனைத் தொடர்ந்து கண்பரிசோதனைக்குட் படுத்தப்பட்டவர்களுக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

(ஒ)

கார்-சைக்கிள் விபத்தில் சிக்கி இருவர் பலி!

புத்தளம்,ஜுன்27

துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த இரு இளைஞர்கள் வேகமாக வந்த காருடன் ஏற்பட்ட விபத்தில் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் முந்தல் என்னுமிடத்தில் இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து புத்தளம் நோக்கி வந்துகொண்டிருந்த கார் ஒன்றே துவிச்சக்கர வண்டியை மோதியது.துவிச்சக்கர வண்டியில் பயணம செய்த சம்பிக்க சம்பந்த்(வயது 19), வர்ண சந்தமால(வயது 10) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர். உடனடியாக சிலாபம் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்ட அவர்கள அங்கு மரணமாயினர்.

சந்தேக நபரான சாரதி முந்தல் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார். புலன் விசாணைகளையும் முந்தல் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர்.

(ம)

வவுனியா ஓட்டோ சாரதிக்கு சாவகச்சேரியில் அடிஉதை!

சாவகச்சேரி,ஜுன்27

உறவனின் மரண வீட்டில் கலந்து கொள்ள அவசரமாக யாழ்ப்பாணம் போகவேண்டும் எனக் கூறி வவுனியாவில் ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்தி வந்த இரு இளைஞர்கள் சுமார 90 மைல்கள் தாண்டி சாவகச்சேரி நகர் அண்மித்ததும் சாரதியைத் தாக்கிவிட்டுத் தலைமறைவாகியுள்ளனர். ஓட்டோவை சாவகச்சேரி அருகே சனநடமாட்டம் இல்லாத பகுதிக்கு செலுத்துமாறு அதன் சாரதியை இளைஞர்கள் பணித்ததாகவும் -

ஆள் நடமாட்டம் அற்ற பகுதியை அவதானித்த ஆட்டோ சாரதி இந்தப் பகுதியால் எங்கு செல்வது எனக கேட்டதும் ஆட்டோவில் பயணம் செய்த இரு இளைஞர்களும் ஆட்டோ சாரதியைத் தாக்கிவிட்டு அவ்விடத்தை விட்டு தப்பிச் சென்றதாகவும் - கூறப்படுகிறது. வவுனியாவில் இருந்து வந்ததற்கான ஓட்டோ கட்டணமும் ஓட்டோ சாரதிக்கு வழங்கப்படவில்லை. இந்த நிலையில் சம்பவ இடத்திலிருந்து பிரதான வீதிக்குச் சென்று விவரீதத்தை அங்கு நின்ற பொதுமக்கள் மற்றும் கிராம சேவை அலுவலருக்கு ஓட்டோ சாரதி தெரியப்படுத்தினார்.

(ஒ-31)

Ashok Leyland

மெரைன் டீசல் என்ஜின்கள்

கடலுக்கு செல்லும் படகுகளுக்கும்
இழுவைக்கப்பல்களுக்குமுரிய நம்பிக்கைக்குரிய
குறைவான எரிபொருளில் இயங்கும் இயந்திரங்கள்



- 52 முதல் 170 குதிரை சக்தி வாய்ந்த இயந்திரங்கள்
- விற்பனைக்கு பின்னர் சிறந்த சேர்விஸ் வழங்கப்படும்
- உதிரிப்பாகங்கள் இலகுவில் கிடைக்கும்
- ஆகக்கூடிய முறுக்கு விசையுடன் குறைந்த இயந்திரவேகத்துடன் சிறப்பாக இயங்கக் கூடியது.
- நேரடியாக சக்தி கொடுக்கப்படுவதனால் குறைவான வெப்ப ஏற்பத்திறனுடன், குறைந்த எரிபொருளில் இயங்கி, இயந்திரத்திற்கு நீண்ட ஆயுளை அளிக்கிறது.
- நம்பிக்கைக்குரியது, திறமையிக்கது, அமைதியாக இயங்கக் கூடியது நீர்சக்தியினால் இயங்கும் மெரைன் கியர்களை கொண்டது.

ஏக விநியோகஸ்தர்கள்

C.F.T. என்ஜினியரிங் லிமிட்டட் (C/22685)
இல. 292, காலி வீதி, கொழும்பு 3.
தொலைபேசி: 301381-3, ∴பெக்ஸ்: 565621

மரண அறிவித்தல்கள்

நல்லையா கந்தசாமி *(அம்மான்)*

(முன்னாள் ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)

பனிப்புலம், கலட்டி, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகக் கொண்ட நல்லையா கந்தசாமி அவர்கள் 24.06.2002 திங்கட்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு நல்லையா - அன்னம்மா தம்பதியினரின் அருமை மகனும் பவளத்தின் அன்புக் கணவரும் முரளீஸ்வரன், ரமேஸ்வரன், நல்லேஸ்வரன், திலகேஸ்வரன், காந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2002) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கம்பில்துறை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பனிப்புலம், தகவல்:
கலட்டி, பண்டத்தரிப்பு. (5278) திருமதி க.பவளம் (மனைவி)

திருமதி கந்தசாமி சிவஞானேஸ்வரி

பொன்னாலை, கிருஸ்ணன் கோயில் வடக்கு வீதியைப் பிறப்பிடமாகவும் டச்சு வீதி, தொல்புரத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி சிவஞானேஸ்வரி 24.06.2002 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னா பகந்தசாமியின் அன்பு மனைவியும் செங்கமலன், காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் தங்கராசா, லிங்கம், கந்தசாமி, சகாதேவன் ஆகியோரின் அருமைச் சகோதரியும் விஜயலட்சுமி, விஜயமாலா, ராதா கிருஷ்ணன், கிருஷ்ண மூர்த்தி, தயானந்தன், விஜயகௌரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் தேவராஜா, வரதராஜா, புஷ்பராகம், சுகந்தி, சறோ, செல்வம் ஆகியோ ரின் அன்பு மாமியாரும் தேவறஜனி, விஜயறஞ்சன், விஜயறஜிதரன், விஜிதரன், கிருஷ்ணராஜ், றாஜினி, ஐஸ்வினி, துவாரகன், பதிகரன், றம்யா, அனுஜன், லக்சனா, பவித்திரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரு மாவார்.

அவரது இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2002) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு தொல்புரம், டச்சு வீதி இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய், பித்தனை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னாலை, தகவல்:
சுழிபுரம் (5277) ப.கந்தசாமி(கணவர்).

கண்டனப் பேரணியில் பங்கேற்குமாறு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜுன்27

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறைவரை இன்று நடத்தப்படவுள்ள கண்டனப் பேரணியில் பங்குபற்றுமாறு பல்வேறு அமைப்புக்கள் அழைப்பு விடுத்துள்ளன.

பல்கலை ஊழியர் சங்கம்

தீவகத்தில் அரசியல் பணியாரியும் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் தாக்கப்பட்ட சம்பவமானது பல்வேறு தரப்பினரின் கடின உழைப்பால் துளிர்வுடத் தொங்கியுள்ள சமாதான முயற்சிகளுக்கு ஆப்புவைக்க முனைவோரின் செயலாகும். இத்தகைய செயல்கள் இனிமேல் நடைபெறாமல முற்றுப்புள்ளி வைப்பதன்மூலம் மீண்டும் ஒரு போர் மூளாமல் தடுக்க முடியும். இதற்கு சமாதான விரும்பிகள் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும்.

இந்த வகையில் யாழ் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் இன்று நடத்த உத்தேசித்துள்ள தீவகம் நோக்கிய பேரணியில் பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் கலந்துகொள்வதென முடிவுசெய்துள்ளது.

அங்கத்தவர்கள் அனைவரும் இன்று காலை 9மணிக்கு தமது பணியிடங்களிலிருந்து வெளியேறி இராமநாதன் மண்டப முன்றிலில் ஒன்றுகூடுமாறு வேண்டப்படுகின்றீர்கள். அங்கிருந்து துரையப்பா விளையாட்டு அரங்கு நோக்கிச்செல்லும் பல்கலைக்கழக மாணவர்களுடன் நாமும் இணைந்துகொள்வோம் - என்றுள்ளது.

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம்

விடுதலைப் புலிகளின் தீவகப் பொறுப்பாளர் செம்மணன் மற்றும் துணைப் பொறுப்பாளர் தயாளன் ஆகியோர் வேலணையில் வைத்து தாக்கப்பட்ட சம்பவத்தால் தமிழ்மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் இச்செயற்பாட்டைக் கண்டிப்பதோடு இன்று நடைபெறும் கண்டனபேரணியில் அனைத்து கூட்டுறவு ஊழியர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

தெங்கு பனம் பொருள் கூட்டுறவு சங்க சமாசம்

தீவகத்தில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நடைபெறும் கண்டனப்பேரணியில் சங்கங்கள், கொததணிகள், தமது கிளைகள், காரியாலயங்களை மூடி, பேரணியில கலந்துகொண்டு பூரண ஆதரவைத் தெரிவிககவேண்டும் என்று கோருகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

போட்டி ஒத்திவைப்பு

யாழ்.கல்வி வலயத்தின் தமிழ் மொழித்தினப் போட்டியையொட்டி இன்று வியாழக்கிழமை நடைபெறவிருந்த ஆக்கத்திறன் போட்டிகள் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது. அன்றையதினம் ஏற்கனவே தீர்மானித்த நிகழ்ச்சிநிரலின்படி நிகழ்வுகள் நடைபெறும் என்று யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார். (ஒ-10-51)

சமய சந்நிதிகளில்

சாவகச்சேரி,ஜுன்27

உடுப்பிட்டி இமையாணன் மேற்கு ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலய ஆவர்த்தன நவகுண்டபக்ஷ மகா கும்பாபிஷேக விழா இன்று வியாழக்கிழமை காலை 9.30மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

மகா கும்பாபிஷேகம், கும்பாபிஷேக பிரதமகுரு சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிகதேசிகர் தலைமையில் நடைபெறும். (ஒ-31)

★ ★ ★

ஏழாலை கோட்டைக்காடு சாளையம்பதி முருகன் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

தீர்த்த உற்சவம் நாளை வெள்ளிக் கிழமை 11மணிக்கு நடைபெறும்.

★ ★ ★

சுரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீவீரமாகாளி அம்பாள் ஆலய அந்தரீதப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று காலை 11 மணிக்கு நடைபெறும்.

இதற்கான பூர்வாங்கக் கிரியைகள் நேற்றுக்காலை ஆரம்பமாகின. (ஒ-9-15-ரி)

★ ★ ★

இளவாலை ஒல்லுடை ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்த உற்சவத்தை முன்னிட்டு ஒல்லுடை அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே சமய அறிவுப் போட்டி, பேச்சுப்போட்டி, பண்ணிசைப் போட்டி ஆகிய பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன. (ஒ-135)

★ ★ ★

வரணி கரம்பைக்குறிச்சி ஆழ்வார் மடம் ஸ்ரீமுருகன் ஆலயத்தின் புனராவர்த்தன பஞ்சகுண்டபக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.30மணி முதல் 11 மணிவரையிலான சுப முகூர்த்தத்தில் நடைபெறும்.

பிரதிஷ்டா பிரதம குருவாக பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள் பணியாற்றுவார். (ஒ)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது தமிழரசுக் கட்சியையும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியையும் ஒன்றிணைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கியவரும் தமிழ்மக்கள் பல தரப்பட்ட கொள்கைகளை விடுத்து ஒரு கொடியின் கீழ் ஒருமித்து நின்று எமது உரிமைகளை வென்றெடுக்கவேண்டும் என்று பாடுபட்டவருமான அருந்தொண்டர்

உயர்திரு. வீ.ஆனந்தசங்கரி

அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதை வரவேற்று நாம் மிகவும் சந்தோஷத்துடன் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆறுமுகம் வைத்திய நிலையம், அளவெட்டி.

திரு.ஆ.தியாகராசா J.P.
வட. இலங்கை ஆயுர்வேதப் பரம்பரை வைத்திய சங்கத் தலைவர்.

(C/22717)

கண்ணீர் அஞ்சலி

எமது சனசமூக நிலைய அங்கத்தவர்

தம்பிஐயா முருகானந்தன்

(இரசாயனவியல் ஆசிரியர், உவிஸ்லிக் கல்லூரி, கொழும்பு)

அவர்களின் திடீர் மறைவையொட்டி துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

நிர்வாகிகளும் உறுப்பினர்களும்
கல்வயல் சமூகசேவா சங்கம்.

(5281)

அஞ்சலி

தந்தாய்!
உன் நினைவில் ஓராண்டு
போனதடா என்னவனே!
எம் நினைவில் நீ அங்கு
எப்படித்தான் தனிமையிலே? - *கவிஞர் பாவலவன.*

பாவிலு சத்தியசீலன்

(அல்லைப்பிட்டி)

தோற்றம்: 1938.06.15 மறைவு: 2001.06.30

நண்பனே நீ எனக்கு
நண்பனாய் நான் உனக்கு!
கை தட்டும் நாளிலிருந்து
ரை கட்டும் நாள் வரையில்
தந்தையே நீ எனக்கு
தந்தவர் யார் உனக்கு?
விந்தையே உன் எழுத்து
விளங்கவில்லை ஏன் எனக்கு?
பாவலனே சீலா நீ
பாலகனாய் பாரினிலே
பாடிட்டாய் பழகிட்டாய் இன்று
பறந்து விட்டாய் என் செய்வேன்?

இறந்துவிட்டாய் நீ என்று
இயம்பினாள் என்தாயார்
மறைந்த உன் உடலை
மரத்தடியில் புதைத்தனரோ?
நாள்கள் பலகடந்து
நான் அங்கு வந்துற்றேன்
நாலண்ணன் கற்குழியில்
நான் வண்ணன் காலடியில்

உன் மைந்தன்
வண்ணன்

(5274)

ராஜா யாழ்ப்பாணம்.
குணால், மோனல்
மற்றும் பலர் நடித்த
(C/22538)
பேசாத கண்ணும் பேசுமே...
காட்சிகள்: தினசரி 10.30, 2.30, 5.30
சனி, ஞாயிறு 10.30, 2.30, 5.30

நிறைஞ்சனாஸ்
சங்கானை
ஸ்ரீகாந்த், பூமிகா, ரகுவரன், விவேக் நடித்த
ரோஜாக்கூட்டம்
(நீஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.) (C-22539)

திருத்தம்

நேற்றைய (26.06.2002) புதன் கிழமை உதயனில் 10ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய 95ஆம் நாள் நினைவஞ்சலி விளம்பரத்தில் நினைவஞ்சலிக் குரியவரின் பெயர் மாணிக்கம் நவராசா என்பதற்குப் பதிலாக மாணிக்க வாசகம் நவராசா எனத் தவறுதலாக பிரசுரமாகிவிட்டது. அதனைத் திருத்தி வாசிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C/22721) மனைவி, பிள்ளைகள்.

திருத்தம்

நேற்றைய (26.06.2002) உதயனில் 8ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய **விஜயரத்தினம் விமலநாதன்** என்பவரின் மரண அறிவித்தல் விளம்பரத்தில் தகவல் தந்தவரின் தொலைபேசி இலக்கம் 508447 என்று இருக்கவேண்டும். அது தவறுதலாக 502447 என்று அச்சாகிவிட்டது. தவறுக்கு வருந்துகின்றோம்.

(ஆ-ர்)

மெய்சிலிர்க்க வைக்கும் ஆறாவது ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 10-02-1933 மறைவு 07-04-1996

அமரர் வல்லிபுரம் இராசரெட்ணம்

(ஓய்வுபெற்ற OLDO ஓவசியர்)

திதி: 28.06.2002

அன்பால் எமைக் காத்து
ஆசையாய் எமை வளர்த்து
பூவுலகில் சிறக்க வைத்த எந்தையே!
சீராக நாம் வாழும் காலமதில்
எம் சிறப்பைக் காணாது சென்றனையோ?
"அப்பா" என்று நாம் ஆயிரம் தரம்
அழைத்தாலும் உமைக் காணாது தவிக்கின்றோம்!

இந்நிலையில் ஆறாவது ஆண்டில் தங்களை நினைவு கூருகின்றோம். உங்கள் ஆத்மா சாந்தி அடையட்டும்.

ஓம் சாந்தி!

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

கெனடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(5285)

கண்ணீர்க் காணிக்கை

எமது ஸ்தாபனத்தின் சக ஊழியர்

திரு.செ.பாலகணேசன் அவர்களின் அன்பு மனைவி

திருமதி கமலினிதேவி பாலகணேசன்

அவர்களின் மறைவினால் துயரத்திலிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் கண்ணீரைக் காணிக்கையாக்கி, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

விமாகி, - சக ஊழியர்கள்.

27/3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(5279)

மரண அறிவித்தல்கள்

சுப்பையா நடராஜா

அளவாவோடை, சுன்னாகத்தைச் சேர்ந்த சுப்பையா நடராஜா அவர்கள் நேற்று (26.06.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் மனோன்மணி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2002) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவாவோடை,
ஏழாலைதெற்கு,
சுன்னாகம்.

தகவல்:
சதீஸ்குமார்
(பெறாமகன்)

(5280)

தியோகுப்பிள்ளை மனுவற்பிள்ளை

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட தியோகுப்பிள்ளை மனுவற்பிள்ளை 24.06.2002 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சொர்ணம் சின்னமலரின் அன்புக் கணவரும் மரியரட்ணம், அமலராணி, அருட்சகோதரி றோஸ்மலர் (தி.கு.), சோதிரட்ணம் (கனடா), அருட்சகோதரி இதயமலர் (தி.கு.), எமில் யேசுரட்ணம் (பிரான்ஸ்), லூர்துமலர், துரைரட்ணம் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் மாட்டின் டி போரஸ், மல்லிகா, புஷ்பாயூடித், ஜெயா, யஸ்ரின் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற யோசவ் பத்திநாதன் (இளைப்பாறிய தலைமை ஆசிரியர், அளவெட்டி), காலஞ்சென்ற இராயப்பு, ஆசீர்வாதம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (27.06.2002) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கெகித்த, வத்தளை புனித இலாசரஸ் தேவாலயத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

170/2, வெலியமுன ரோட்,
கெகித்த (HEKITA),
வத்தளை.

(C/22716)

தகவல்:
அருட்தந்தை
ப.யோ.ஜெபரட்ணம்
(பெறாமகன்)

கதிரவேலு இந்திரன்

(சங்குசக்கரம், ஸ்ரான்லி வீதி)

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு இந்திரன் நேற்று (26.06.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான S.C.கதிரவேலு (ஜே.பி.யூ.எம். சட்டத்தரணி) - இராசம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் உருத்திரன் (கனடா), வசந்தாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் அசலாம்பிகை, கதிர்காமநாதன் (டாக்டர்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2002) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

198, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(5284)

தகவல்:
டாக்டர் R.கதிர்காமநாதன்
(Dental Surgeon)

பஸ் ஊழியர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தித்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டியில் நெல்லியடிவரை பயணம் செய்த உயர்கல்வி நிறுவனம் ஒன்றைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் மாணவர்கள் சிலர் மதுபோதையில் நடத்துநருடன் முரண்டுபிடித்ததாகக் கூறப்படுகிறது. அதனைத் தொடர்ந்து அந்த பஸ் யாழ். சென்றுவிட்டு மீண்டும் பருத்தித்துறை டிப்போவிற்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது மாலை 7 மணியளவில் நெல்லியடியில் வைத்து சிலர் பஸ்ஸை வழிமறிக்க முற்பட்டனர் என்றும் -

சாரதி சாதுரியமாக பஸ்ஸை பருத்தித்துறை டிப்போவிற்கு பாதுகாப்பாகக் கொண்டு வந்து சேர்த்தார் என்றும் -

பின்னர் மாலை 7.35 மணியளவில் பருத்தித்துறை டிப்போவிற்குள் நுழைந்த கும்பல் ஒன்று அங்கு தாக்குதலை நடத்தியதாகவும் -

ஊழியர்கள் தரப்பில் கூறப்படுகிறது.

தாக்குதலை நடத்திவிட்டு திரும்பிச்செல்லும் வழியில் நெல்லியடியில் - கூட்டணி அலுவலகத்திற்கு அருகில் - வைத்து வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பிறிதொரு பஸ் மீதும் அக்கும்பல் கற்களை வீசித் தாக்கியதாகவும் இதனால் பஸ்ஸின் யன்னல் கண்ணாடிகள் உடைந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

நெல்லியடிப் பொலீஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இரவு 8மணிக்குப் பருத்தித்துறையில் இருந்து யாழ். சென்ற பஸ்ஸிற்கு நெல்லியடிவரை பொலீஸார் பாதுகாப்பு வழங்கினர்.

இத்தாக்குதல் தொடர்பாகப் பருத்தித்துறைப் பொலீஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்யும்பொருட்டு பருத்தித்துறைப் பொலீஸார் நெல்லியடிப் பொலீஸாரின் உதவியை நாடியுள்ளனர்.

தாக்குதல் நடத்தியவர்களைக் கைதுசெய்யும்வரை தாம் சேவையில் ஈடுபடப்போவதில்லை என்று பருத்தித்துறை டிப்போ ஊழியர்கள் தெரிவித்திருக்கின்றனர். எனினும் நேற்றுமாலை வரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

பஸ் ஊழியர்களின் திடீர் வேலை நிறுத்தத்தால் நேற்று பஸ் பயணிகள் பெரும் சிரமங்களைச் சந்தித்தனர்.

வடமராட்சியில் இருந்து குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கு தொழில நிமித்தம்செல்வோர், மாணவர்கள், நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். வீதிக்கு வீதி காத்து நின்று ஏமாற்றமடைந்த பயணிகள் தனியார் வாகனங்களில் பயணத்தை மேற்கொண்டனர். (ஐ-8-173-15-117)

ஆனந்தசங்கரிக்கு வரவேற்பு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டதை அடுத்து நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வரும் வீ.ஆனந்தசங்கரிக்கு கூட்டணியின் யாழ். அலுவலகத்தில் அன்று காலை 10 மணிக்கு பொது வரவேற்பு அளிக்கப்படவிருக்கின்றது. (ஐ-3)

மூதூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னின் வீட்டுக்குள் நேற்றுக்காலை புகுந்த கோஷ்டி ஒன்று அவரைத் தாக்கியதுடன் அவரது வீட்டையும் சேதமாக்கியது. அவர் கத்தி வெட்டுக்கு இலக்கானார்.

இதையடுத்து நகரில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. வழமைக்குத் திரும்பிய நகரம் வெறிச்சோடிப்போனது.

இதற்கிடையே எல்லைக் கிராமங்களில் இருந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. அச்சம் காரணமாக ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர்ந்தன. அவ்வாறே நகரின் மத்திய பகுதியில் இருந்து 67 குடும்பங்கள் பாதுகாப்பிற்காக வெளியேறின.

மூதூர் அசம்பாவிதங்களினால் மொத்தம் ஏழு பேர் தாக்கப்பட்டு காயமடைந்திருக்கின்றனர். இருவரைக் காணவில்லை என்று கூறப்படுகிறது. காயமடைந்தவர்களில் நால்வர் திருமலை வைத்தியசாலையிலும் ஒருவர் மூதூர் வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

20வீடுகள், 5கடைகள், ஒரு பாடசாலை, ஒரு வணக்கததலம் என்பன முதல்நாள் தாக்கப்பட்டன. சுமார் 700 ஏக்கர் வயல்கள் சேதப்படுத்தப்பட்டன. 100இற்கும் மேற்பட்ட கால்நடைகள் காணாமற்போயிருக்கின்றன. 4 மாட்டு வண்டில்கள் கடத்தப்பட்டன. (ஐ-3-4-144)

அரசுத் தரப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரான்ஸ் தூதுவரிடம் கரிகாலன் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. அதன்பின்னர் வெளிநாடுகளுடன் பல்வேறு ஒப்பந்தங்களைச் செய்துள்ளது. இது இடைக்கால நிர்வாகத்துக்கு இடையூறு விளைவிக்கும் முன்முற்சி. அதுமட்டுமல்ல, எம்மை அச்சுறுத்தும் செயல் ஆகும்.

அண்மைக்காலத்தில் அரசு அமெரிகாவுடன் வான் பரப்பு ஒப்பந்தம், சீனாவுடன் ஆழ்கடல் மீன்பிடி ஒப்பந்தம், இந்தியாவுடன் திருகோணமலை எண்ணெய்குத ஒப்பந்தம் என்பனவற்றில் கையெழுத்திட்டுள்ளது. இவையெல்லாம் எமது வளங்களைச் சுரண்டும் கபடநோக்கத்திலான நடவடிக்கைகளேயன்றி வேறொன்றுமில்லை.

கடல்வளம் சுரண்டப்படுமானால் மீனவர் வாழ்வு பாதிக்கப்படும். இடைக்கால நிர்வாகம் ஒன்று அமைக்கப்படுவதற்கு முன்பதாக இந்த ஒப்பந்தங்களைச் செய்துகொண்டதை அரசின் திட்டமிட்ட செயலாகவே கருதுகிறோம்.

இதேவேளை -

பிரான்ஸ் தூதரான நீங்களும் ஐரோப்பிய யூனியனும் இலங்கை அரசுக்கு சுட்டிக்காட்டவேண்டும். பேச்சுகளைத் துரிதப்படுத்த வற்புறுத்த வேண்டும். அரசே பேச்சுக்களை இழுத்தடித்து வருகிறது. தற்போதுள்ள இடைவெளியைப் பயன்படுத்தி தீய சக்திகள் சமாதானத்தைக் குழப்ப முயற்சிக்கின்றன. இதனை நிவர்த்தி செய்து பேச்சுக்கான வழிவகைகளை இலங்கை அரசு செய்யவேண்டும்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட பல விடயங்கள் நிறைவேற்றப்படவில்லை. மக்கள் மத்தியில் வன்முறையைத் தூண்டிவிட்டு இராணுவ செயற்பாட்டுக்கு வழிவகுக்கப்பட்டு வருகிறது.

ஒப்பந்தம் முறிவடைந்தால் இராணுவ வழிக்குத் திரும்பவேண்டியிருக்கும். எனவே, அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உள்ள இடைவெளிகளை நோக்கவேண்டும் எனப் பிரான்ஸ் அரசு இலங்கை அரசை வற்புறுத்தவேண்டும்.

- இப்படி பிரான்ஸ் தூதுவரை கரிகாலன் கேட்டுக்கொண்டார். (ஐ-4)

படைகளின் புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட முறைப்பாட்டில் - கிளாலிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் முன்னரங்கப் பகுதிக்கு வந்து படையினர் 4 காவலரண்களை அமைத்திருக்கிறார்கள். முகமாலையில் புலிகளின் முன்னரங்க காவல் நிலைகளுக்கு 100 மீற்றர், 110 மீற்றர், 130 மீற்றர் ஆகிய தூரங்களில் மூன்று காவலரண்களை படையினர் அமைத்தனர். நாகர்கோயிலில் புலிகளின் முன்னரங்கக் காவல் நிலைகளிலிருந்து 40 மீற்றர், 90 மீற்றர் ஆகிய தூரங்களில் இரு காவலரண்களையும் படையினர் அமைத்துள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இவைபற்றி வரைபடத்தில் தெளிவாகக் குறிப்பிட்டு கண்காணிப்புக் குழுவிடம் தீபன் சமர்ப்பித்திருக்கிறார்.

இரண்டாவதாகக் கடந்த ஜுன் மாதம் 6ஆம் திகதி செய்த முறைப்பாட்டில் முகமாலை கண்டல் பகுதியில் படையினர் 17 காவல் அரண்கள் மற்றும் நகர்வு அகழிகள் அமைத்திருப்பது குறித்து தெளிவான வரைபடம் ஆள்கூறுகளுடன் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்விரு முறைப்பாடுகளையும் அடுத்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புலிகளுடனான தொடர்பாடல் உறுப்பினர் பேர்டி எஸ் ஹார்ட்டி ஹெய்னன் மற்றும் யாழ். மாவட்டப் பிரதிநிதி மக்லன் ஆகியோர் நேரடியாகச் சென்று பிரதேச நிலைவரத்தையும் பார்வையிட்டனர்.

இவர்களுக்கு அப்பகுதி நிலைப்பாடு குறித்து தீபன் விளக்கிக் கூறினார்.

இரு தடவைகள் கண்காணிப்புக் குழுவினர் அப்பிரதேசங்களுக்குச் சென்று வந்தனர்.

இதற்கிடையில் படையினர் அமைத்துச்சென்ற அரண்களை புலிகளின் போராளி அணி ஒன்று பார்வையிடச் சென்றது. அப்போது அங்கு படையினர் வந்தனர். அவர்களிடம் போராளிகள் தாம் இதுபற்றி முறைப்பாடு செய்யப்போவதாகக் கூறினர்.

கடந்த 21ஆம் திகதி கிளாலிக்குக் கிழக்காக உள்ள படையரணுக்கு நேராக இருக்கும் வேம்பொடு கேணி புலிகளின் அரணுக்கு மிக நெருக்கமாக நகர்ந்து வந்த படையினர், அங்கிருந்த வீடு ஒன்றின் கூரைகளைக் கழற்றிச் சென்றிருக்கிறார்கள் இது தொடர்பாகவும் கேணல் தீபன் வரைபடம் மற்றும் ஆள்கூறுகளுடன் கண்காணிப்புக் குழுவுக்கு முறையிட்டிருக்கிறார். (ஐ)

அல்லைப்பிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, அல்லைப்பிட்டியில் அமைக்கப்பட்டிருந்த சோதனை நிலையங்கள், காவலரண்கள் பலவும் கடற்படையினரால் முற்றாக அகற்றப்பட்டுள்ளன.

தீவுப் பகுதிக்குச் செல்லும் பயணிகள் இதுவரைகாலமும் அல்லைப்பிட்டி சோதனைச்சாவடியில் பல்வேறு சோதனைக் கெடுபிடிகளுக்கு ஆளாகிவந்தமை தெரிந்ததே. (எ)

ஈ.பி.டி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் பணிக்குழுவினர் தீவுப்பகுதியில் தாக்குதலுக்கு இலக்கான சம்பவத்துக்கு ஆட்சேபம் தெரிவித்து இன்று கண்டனப்பேரணி நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இந்தப் பேரணியை ஒட்டியே 'உண்மைநிலையை உணருங்கள்' என்ற தலைப்பில் ஈ.பி.டி.பி. கட்சியினர் பிரசுரங்களை நேற்று விநியோகித்தனர். (ஐ)

இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றுவர்.

மூதூரில் வசிக்கும் இரு இனங்களையும் சேர்ந்த பிரமுகர்களையும், பொது அமைப்பினரையும் உள்ளடக்கியதாக இந்த மாநாடு இடம்பெறுகின்றது.

அதேவேளை -

திருகோணமலை பிரதேச செயலர் அலுவலகத்தில் இன்று காலை இடம்பெறும் மற்றொரு மாநாட்டில் அமைச்சர்கள் பங்குபற்றுவர். (ஐ-3)

இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடுகின்றார்கள்; பணம் வசூலிக்கின்றார்கள் என்பது குறித்து தூதுவர்கள் வினவியபோதே பரராஜசிங்கம் எம்.பி. இவற்றைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற உறுப்பினராகிய எனக்கு இதுவரை அவ்வாறான முறைப்பாடு எதுவும் கிடைக்கவில்லை.

தமது நடவடிக்கைகளுக்காக 18 வயதுக்கு மேற்பட்டவர்களே இணைத்துக்கொள்ளப்படுவர்கள் என்று சர்வதேச அமைப்புகளிடம் புலிகள் ஏற்கனவே உறுதியளித்திருக்கின்றனர் - இவ்வாறு அவர் தெரிவித்திருக்கிறார். (ஐ-4)

புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுச்சொத்துகள் ஆகியவற்றுக்கு நாசம் விளைவிப்பது பாரதூரமான செயலாகும். இத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அவர் தெரிவித்தார்.

பருத்தித்துறை பஸ் நிலையத்துக்குள் புகுந்த கும்பல் ஒன்று அங்கு சேதங்கள் விளைவித்ததை அடுத்து பஸ் ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர். அதனைத் தொடர்ந்தே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. (ஐ-3)

கரும்புலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டார்.

அவரது நினைவாக வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த மில்லரின் சிலை கடந்த 1995ஆம் ஆண்டு படையினரால் சேதமாக்கப்பட்டது.

தற்போது புனரமைக்கப்பட்டுவரும் மேற்படி சிலை, கரும்புலிகள் தினமான எதிர்வரும் 5ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-4)

ஊர்காவற்றுறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பனை தெ.வ.அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆகிய பொது அமைப்புகள் ஒன்றிணைந்து யாழ். வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத்தின் தலைமையில் மேற்படி பேரணியை நடத்த ஏற்பாடு செய்துள்ளன.

வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள், ஊழியர்கள் மற்றும் அரச திணைக்கள உத்தியோகத்தர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள், சனசமூக நிலையங்களின் உறுப்பினர்கள் தங்கள் பணிகளை இடைநிறுத்திவிட்டு இந்த எழுச்சிப் பேரணியில் பங்குகொள்ள வசதியாக இன்று காலை யாழ். துரையப்பா ஸ்ரேடியத்துக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பாடசாலை மாணவர்கள் எவரும் மேற்படி பேரணியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். பாடசாலைகள் வழமைபோல் இயங்கும். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் - இன்று நடைபெறவுள்ள எழுச்சிப்பேரணிக்கு யாழ். மாவட்ட தனியார் கல்வி நிலைய ஒன்றியம் பூரண ஆதரவு தெரிவித்து அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. (எ-8-10-15)

விக்னா கல்வி நிறுவனம்

O/L DAY CLASS (8.30 - 2.00)

பழைய பாடத்திட்டத்துக்கான வகுப்புகள் இங்கு மட்டுமே நடைபெறுகின்றன. புதிய பாடத்திட்டத்துக்கான இறுதிப்பரிவு அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

☞ கணிதம், விஞ்ஞானம் அலகு ரீதியான மீட்டல் பிரத்தியேக வகுப்பு (Paper Class)

ஆரம்பம்: 29.06.2002 சனி (12.00 மணி) (5283)

BEACON

யாழ்நகர்

புவிமியல்

A/L, G.A.Q.,

B.A.PART -I & PART II

வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

ஆசிரியர்:-

S.R. BALA

B.A.(Hons) (5278)

மரண அறிவித்தல்கள்

தம்பையா பரநிருபசிங்கம்

(இளைப்பாறிய அதிபர், நயினாதீவு மகா வித்தியாலயம்)

நயினாதீவு, 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தம்பையா பரநிருபசிங்கம் அவர்கள் 25.06.2002 செவ்வாய்க்கிழமை நயினாதீவில் காலமானார்.

அன்னார் வரதலட்சுமியின் அன்புக் கணவரும் வசந்தகுமார், ரவீந்திரா, சுவர்ணன், தவநிதி, சுரேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2002) வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சல்லிபரவை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7ஆம் வட்டாரம், நயினாதீவு. (C/22718)) தகவல்: ப.சுரேஸ்குமார் (மகன்)

வல்லிபுரம் தியாகராஜா

(முன்னாள் புகையிரதநிலைய ஊழியர். உரிமையாளர் - ஐடியல் கிறீம் ஹவுஸ்)

தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் பளையை வசிப்பிடமாகவும், சுண்டுக்குளியைத் தற்காலிக வதிவிடமாகவும்கொண்ட வல்லிபுரம் தியாகராஜா அவர்கள் நேற்று (26.06.2002) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற யோன் மற்றும் கனகம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் லலிதாதேவியின் அன்புக் கணவரும் வாசுகி, கஜன் (ஐடியல் கிறீம் ஹவுஸ்), கீர்த்தனசங்கர் (தரம் 8, சென்.ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் வெற்றிவேலின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் தர்மராஜா, தம்பிராஜா, புஸ்பமலர், புஸ்பலீலா, புலேந்திரராஜா, புஸ்பமாலினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் திலகரட்ணம் (கனடா), ஆரியதாஸ் (U.K.), செல்வநாயகம், சந்திராதேவி (ரஞ்சி-கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிஷோதன், விஷ்ணுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2002) வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு அன்னாரின் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

12/5,சந்தனமாதா கோயில் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (5289) தகவல்: தி.கஜன் (மகன்) (யாழ்நகர் ஐடியல் கிறீம் ஹவுஸ், கச்சேரியடி ஐடியல் ஸ்ரார் மல்ரி சென்ரர்)

புதுக் கடைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷம் ஆனி மாதம் 13 ஆம் நாள் இன்று (27-06-2002) வியாழக்கிழமை (ப.நே) காலை 10.27 மணி தொடக்கம் 11.18 மணி வரையுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில் சிறிநதியா நகை மாளிகை, சிறிரூபா நகை மாளிகை என்பவற்றின் இணை நிறுவனமான

சானுயா நகை மாளிகை

எனும் புதிய நகை வியாபார ஸ்தாபனத்தை இறைவன் துணைகொண்டு திறப்புவிழா செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் அன்பர்கள், உறவினர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் தங்கள் குடும்பசமேதமாக வருகை தந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பையே வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரும் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 1/2, சானுயா நகை மாளிகை, சிறிநதியா கட்டடம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (5265)

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
உரிமையாளர் : நடராஜா சத்தியரூபன்,
சிறிநதியா நகை மாளிகை, சிறிநதியா கட்டடம்,
இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.06.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.